SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 3, Pages:56
October-2021, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2021

விலை ரூ.5/-



11-10-2021
திங்கட் கிழமை
இரவு:
கருட வாகனம்

**திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை**



திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



**07-10-2021**
வியாழக்கிழமை
பகல்:
துவஜாரோஹணம்



**07-10-2021**
வியாழக்கிழமை
இரவு: பெரிய சேஷ வாகனம்



**08-10-2021**
வெள்ளிக்கிழமை
பகல்: சிறிய சேஷ வாகனம்



*தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய:*
*ஸர்வாந் ப$_3$ந்தூ$_4$நவஸ்தி$_2$தாந் ||*
*க்ருபயா பரயாவிஷ்டோ*
*விஷீத$_3$ந்நித$_3$மப்$_3$ரவீத் |*

**கூடியிருந்த அந்த அனைத்து உறவினர்களையும் நன்கு பார்த்த குந்தியின் மகனான அந்த அர்ஜுனன், மிகுந்த இரக்கத்தோடு கூடியவனாக வருத்தம் கொண்டு, இதைப் பேசலுற்றார்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–28*



*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்து உன்பவளவாய்க் காண்பேனே.*

**பாபபலமான, க்ரூரமான ஸம்ஸார ஸ்ம்பந்தத்தை அறுத்துத் தருபவனான லக்ஷ்மீ நாதனே, அடியார்கள் விஷயத்தில் அபிமானத்தால் மிகுந்தவனே, திருவேங்கட மலையில் நித்ய வாஸம் செய்கிறவனே, தேவரீருடைய ஆலயத்தின் முன் புறத்தில் உன் பக்தர்களும், தேவர்களும், ரம்பை முதலிய தேவ கன்னிகளும் நெருங்கி நடமாடும் படியாக இருந்து தேவரீருடைய பவழம் போன்ற திருவதரத்தை காணவேணு மென்றாசையுடையவனாய் இரா நின்றேன்.**

*- குலசேகர ஆழ்வார்*





# ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோவிந்த நாமாவளி

ஸ்ரீ ஸ்ரீநிவாசா கோவிந்தா
ஸ்ரீவேங்கடேசா கோவிந்தா
பக்த வத்சலா கோவிந்தா
பாகவத ப்ரிய கோவிந்தா
நித்ய நிர்மலா கோவிந்தா
நீலமேகஸ்யாம கோவிந்தா
புராண புருஷா கோவிந்தா
புண்டரீகாக்ஷா கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

நந்த நந்தனா கோவிந்தா
நவநீத சோர கோவிந்தா
பசு பாலக ஸ்ரீ கோவிந்தா
பாப விமோசன கோவிந்தா
துஷ்ட சம்ஹார கோவிந்தா
துரித நிவாரண கோவிந்தா
சிஷ்ட பரிபாலக கோவிந்தா
கஷ்ட நிவாரண கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

வஜ்ர மகுடதர கோவிந்தா
வராக மூர்த்திவி கோவிந்தா
கோபி ஜனலோல கோவிந்தா
கோவர்த்தனோத்தார கோவிந்தா
தசரத நந்தன கோவிந்தா
தசமுக மர்தன கோவிந்தா
பட்சி வாகன கோவிந்தா
பாண்டவ ப்ரிய கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

மத்ஸ்ய கூர்மா கோவிந்தா
மதுசூதனஹரி கோவிந்தா
வராக நரசிம்ம கோவிந்தா
வாமன ப்ருகுராம கோவிந்தா
பலராமாநுஜ கோவிந்தா
பௌத்த கல்கிதர கோவிந்தா
வேணுகான ப்ரிய கோவிந்தா
வேங்கடரமணா கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா
சீதா நாயக கோவிந்தா

ச்ரித பரிபாலக கோவிந்தா
தரித்ர ஜனபோஷக கோவிந்தா
தர்ம ஸம்ஸ்தாபக கோவிந்தா
அனாத ரட்சக கோவிந்தா

ஆபத் பாந்தவ கோவிந்தா
சரணாகத வத்ஸல கோவிந்தா
கருணா சாகர கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

கமல தளாக்ஷ கோவிந்தா
காமித பலதாதா கோவிந்தா
பாப விநாசக கோவிந்தா
பாஹி முராரே கோவிந்தா
ஸ்ரீ முத்ராங்கித கோவிந்தா
ஸ்ரீ வத்சாங்கித கோவிந்தா
தரணீ நாயக கோவிந்தா
தினகர தேஜா கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

பத்மாவதி ப்ரிய கோவிந்தா
ப்ரசன்ன மூர்த்தி கோவிந்தா
அபயஹஸ்தப்ரதர்சன கோவிந்தா
மர்த்யாவதாரா கோவிந்தா
சங்க சக்ரதர கோவிந்தா
சார்ங்கத கதாதர கோவிந்தா
விரஜா தீர்த்த கோவிந்தா
விரோதி மர்தன கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

சாளகிராமதர கோவிந்தா
சகஸ்ர நாமா கோவிந்தா
லக்ஷ்மீ வல்லப கோவிந்தா
லக்ஷ்மண ஆக்ரஜ கோவிந்தா
கஸ்தூரி திலக கோவிந்தா
காஞ்சனாம்பரதர கோவிந்தா
கருடவாகன கோவிந்தா
கஜராஜ ரக்ஷக கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

வானர சேவித கோவிந்தா
வாரதி பந்தன கோவிந்தா
ஏழுமலைவாசா கோவிந்தா
ஏக ஸ்வரூபா கோவிந்தா
ஸ்ரீராம கிருஷ்ண கோவிந்தா
ரகுகுல நந்தன கோவிந்தா
பிரத்யக்ஷ தேவா கோவிந்தா
பரம தயாகர கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

வஜ்ரகவசதர கோவிந்தா
வையந்தி மால கோவிந்தா

வட்டிகாசுப்ரிய கோவிந்தா
வசுதேவ தனயா கோவிந்தா
வில்வ பத்ரார்ச்சித கோவிந்தா
பிட்சுக சம்ஸ்துத கோவிந்தா
ஸ்திரீபும் ரூபா கோவிந்தா
சிவகேசவ மூர்த்தி கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

பிரம்மாண்ட ரூபா கோவிந்தா
பக்த ரட்சக கோவிந்தா
நித்ய கல்யாண கோவிந்தா
நீரஜநாப கோவிந்தா
ஹதீராம ப்ரிய கோவிந்தா
ஹரி சர்வோத்தம கோவிந்தா
ஜனார்த்தனமூர்த்தி கோவிந்தா
ஜகத்சாக்ஷி ரூபா கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

அபிஷேகப்ரிய கோவிந்தா
ஆபன் நிவாரண கோவிந்தா
ரத்ன கிரீடா கோவிந்தா
ராமாநுஜநுத கோவிந்தா
சுயம் ப்ரகாச கோவிந்தா
ஆஸ்ரித பக்ஷ கோவிந்தா
நித்யசுப ப்ரத கோவிந்தா
நிகில லோகேசா கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

ஆனந்த ரூபா கோவிந்தா
ஆத்யந்த ரஹிதா கோவிந்தா
இகபர தாயக கோவிந்தா
இபராஜ ரக்ஷக கோவிந்தா
பரம தாயாளோ கோவிந்தா
பத்மநாப ஹரி கோவிந்தா
திருமலை வாசா கோவிந்தா
துளசி வனமால கோவிந்தா
கோவிந்த ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா

சேஷாத்ரி நிலயா கோவிந்தா
சேஷ சாயினி கோவிந்தா
ஸ்ரீ ஸ்ரீநிவாசா கோவிந்தா
ஸ்ரீவேங்கடேசா கோவிந்தா
கோவிந்த ஹரி கோவிந்தா
கோகுல நந்தன கோவிந்தா



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**


மலர் 01
இதழ் 03

## அக்டோபர் 2021


## உள்ளுறை

பக்கம்


**திருவோணத் திருவிழா** 7
- கீர்த்திமூர்த்தி உ.வே.தி.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருப்பதி.

**திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் :**
**வேங்கடம் ஆடும் கூத்தன்** 13
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

**தாஸ சாகித்யத்தில் திருமலை இயற்கை அழகு** 16
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.

**வாகன சேவையில் வேங்கடவன்** 21
- திருமதி ராதா ராமநாதன், திருப்பதி.

**திருவேங்கடம் அடை நெஞ்சமே** 25
- திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை.

**திருமலையப்பன் பாக்சவாரி** 31
-திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.

**வேங்கடவற்கென்னை விதி** 34
- திருமதி அருணா சங்கர வேலாயுதம், மதுரை.

**அத்திமர பெருமாளாக அருள்புரியும் ஸ்ரீசீனிவாசப் பெருமாள்** 37
- அறந்தாங்கி சங்கர், சென்னை.

**கருமை மலையினில் கருணை மழை முகில்** 41
- உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை.

**திருவேங்கடக் காட்சிகள்** - திரு. நா. சிவராமன், சென்னை. 44

**கலியுக வரதன் வேங்கடேசன்** - திருமதி கீதா சுதர்சனம், புதுதில்லி. 48

**சித்திரக்கதை : கருட வாகனம்** 52



*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


**நீங்கள் ஸப்தகிரி இதழை**
www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு**
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### வாசகர்களுக்கு...

***இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*** -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : கருடவாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : சக்கர ஸ்நானம், திருமலை.



உங்களுடன்...

# திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

உலகமுண்ட பெருவாயனான எம்பெருமான் உலகத்தை படைக்க எண்ணி பிரம்மனை தனது உந்தித்தாமரையில் படைத்தான். பின்னர் பிரமன் மூலமாக அனைவரையும் படைத்தான். படைக்கப் பட்டவைகள் ஜடம் என்றும், அஜடம் என்றும் பலவகைப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அவை அனைத்தும் எம்பெருமானின் உடற் கூறுகளேயாகும். இவற்றையறியாத மனித இனத்திற்கு மெய்ப்பிக்க எம்பெருமானே மானைக்காட்டி மானை பிடிப்பாரை போல மக்களாகவும், மாக்களாகவும் அவதரித்தான்.

எம்பெருமானின் அவதார காலத்தில் வாழ்ந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகளாவர். ஆனாலும் அவ்வதிஷ்டத்தை பயன்படுத்திக் கொண்டவர்கள் ஒரு சிலரேயாவர். பலர் போலியான சிற்றின்ப வாழ்க்கையில் நாட்டம் காட்டினர். ஒரு சிலரே பரம்பொருளை மனதிலே இருத்தி வைக்க முன் வந்தனர். நம்மாழ்வார் 44 நாட்களுக்கு முன்னதாக தான் பிறக்கவில்லையே என ஏங்கினார். ஏனெனில் கலியுகம் பிறந்து 43வது நாள் அவர் பிறந்தார். அதற்கு முன்பு துவாபர யுகத்தில் கண்ணன் அவதரித்து இருந்ததினால் அவனைக் கண்டு பற்றியிருக்கலாமே என்று எண்ணினார். அவருடைய வருத்தம் நம்மையும் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது அல்லவா!

யுகங்கள் தோறும் அவதரிக்கும் எம்பெருமான் இக்கலியுகத்தில் இருப்பவர்களுக்கும் அருள்பாலிக்க எண்ணி அர்ச்சா ரூபியாக எழுந்தருளி கருணை மழை பொழிகின்றான். பரம்பொருள் எளிவந்த தன்மையில் கண்டு பற்றுகைக்கு சௌலப்யம் என்னுமா போலே காட்சியளிப்பது அர்ச்சை வடிவில்தான்.

திருவேங்கடமலையிலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு *“ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்”* என்று நம்மாழ்வார் கூறுவது போன்று, நாளும் உற்சவங்களும், திருவிழாக்களும்தான். வேண்டுவோருக்கு வேண்டிய வரங்களை அளித்து கலியுக வரதனாக அருள்பாலிக்கின்றான். பொருள் வேண்டுவோருக்கு பொருளும், அருள் வேண்டுவோருக்கு அருளும் அளிப்பவன் அந்த அலர்மேல் மங்கை மணாளனாவான்.

இந்தத் திருவேங்கட மலையிலே நின்றருள் பாலிக்கும் எம்பெருமானைக் காண சிவனும், பிரம்மனும், இந்திரனும் பூலோக வைகுண்டமான இத்திருமலை கோயிலுக்குள் நெருக்கிக் கொண்டு நுழைவதாக குலசேகராழ்வார் பாசுரமிடுகிறார்.

கண்கண்ட கலியுக தெய்வமான திருமலையப்பனுக்கு தினமும் திருவிழாதான். ஆயினும் வருடந்தோறும் நடைபெறும் பிரம்மோத்ஸவத்திற்கு ஈடு இணை இல்லை என்றே கூற வேண்டும். இந்த உத்ஸவத்தை பிரம்மாவே முன் நின்று நடத்துவதாக ஐதீகம். ஆகவேதான், திருமலையில் வாகன சேவைகளுக்கு முன்பாக பிரம்ம ரதம் ஒன்று செல்வதை இன்றும் நாம் காணலாம். இந்த மாபெரும் உத்ஸவத்தைத் தான் திருமழிசையாழ்வாரும் *“காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர ஓணவிழவில் ஒளியதிரப்பேணி வருவேங்கடவா என் உள்ளம் புகுந்தாய்”* என்று காண்பதற்கு பேரவா கொண்டிருந்தார்.

இன்றைய கொரோனா பெருந்தொற்று சமயத்தில் திருமலைக்குச் சென்று திருவேங்கடமுடையானை தரிசிக்க இயல வில்லையே என்று மனம் வருந்துகின்றோம். ஆனால், திருமலைக்கு நேரில் சென்று திருவேங்கடமுடையானை தொழுதால் தான் பலன் கிடைக்கும் என்பதில்லை. திருவேங்கடத்திலே எம்பெருமான் நிற்கிறான் என்று நினைத்தாலே நமது துன்பங்கள் நீங்கி விடுமாம். இதனையே பொய்கையாழ்வார், *“வேங்கடமும்...நின்றான்...என்றால் கெடுமாம் இடர்”* என்கிறார். திருவேங்கடமுடையானின் திருவவதார நாளினை முன்னிட்டு நடைபெறும் இப்பிரம்மோத்ஸவ நாளிலே எம்பெருமானை நினைத்து பேரின்ப நிலையினை அடைவோமாக.

"காணலுறுகின்றேன்
கல்லருவி முத்துதிர
ஓணவிழவில் ஒலியதிர -
பேணி
வருவேங்கடவா என்னுள்ளம்
புகுந்தாய்
திருவேங்கடமதனை சென்று"

இது ஆழ்வார்கள் பதின்மரில் நான்காமவரான திருமழிசைப் பிரான் அருளிய நான்முகன் திருவந்தாதியின் நாற்பத்தொன்றாம் பாசுரமாகும். வேங்கடவன் தனது திருவோணத் திருவிழாவின் சிறப்பை, ஆழ்வார் தமது அகக்கண்ணுக்குக் காட்டி அருளக் கண்டு அனுபவித்து அவ் வளவில் திருப்தி பெறாமல் திருவேங்கட மலைக்கேச் சென்று, அச்சிறப்பினை வெளிக்கண்ணால் கண்டுகளிக்கத் தாம் கொண்டுள்ள ஆசையை அப்பெருமானையே விளித்து விண்ணப்பம் செய்கிறார்.

ஓணவிழவில் – திருவோண நன்னாளை முக்கியமாகக் கொண்டு நடத்தும் திருவிழாவில், கல்லருவி –"கல்"லென்று ஒலித்துக் கொண்டு பாயும் அருவிகளிலிருந்து, முத்து உதிர – சிங்கம் பிளந்த யானை மத்தகங்களின் முத்துக்களும், மூங்கில் உதிர்த்த முத்துக்களும் உதிரா நிற்கவும், ஒலி அதிர –வேத ஆகம பாராயண ஒலிகளும், வாத்திய ஒலிகளும் முழங்கா நிற்கவும், பேணி வரு வேங்கடவா – திருமால் திருவைகுந்தத்தையும் விட்டு நமக்காக வந்து நிற்கிற இந்த திருமலையே நாமும் சென்று சேரவேண்டிய இடமென்று கருதி, பக்தர்கள் திரள்திரளாக விரும்பிச் சென்று சேரப்பெற்றதான வேங்கட மலையை உறைவிடமாகக் கொண்ட எம்பெருமானே, என்னுள்ளம் புகுந்தாய் – நான் உன்னை இடைவிடாமல் நினைந்து இன்புறுமாறு என் மனத்தினுள் புகுந்தாய்.

முத்துக்களை உதிர்க்கும் அருவிகளின் ஒலியோடும், வேத வாத்தியங்களின் ஒலியோடும் வேங்கடத்திற்கு விரும்பி வந்து சேர்ந்து உன்னைத் தொழுகின்ற பக்தர்களோடும் அங்கு நீ அவர்களுக்கு காட்சியளிக்கின்ற நிலையோடும் கூட என் உள்ளத்தினுள்ளே புகுந்துவிட்டாய் என்றபடி. நானோ என்றால் திருவேங்கடமதனைச் சென்று காணலுறுகின்றேன் – நீ எழுந்தருளியிருக்கும் திருவேங்கட மலையை வந்து கிட்டி உன்னைக் காண ஆசைப்படுகின்றேன். அதாவது – அகக்கண்ணால் உன்னை கண்டு இன்புறுவதில் திருப்தியடையாமல், வெளிக்கண்கள் கொண்டு உன்னையும், உன் பக்தர்களையும், திருவிழாக்கோலம் பூண்ட திருமலையையும், அங்கு அருவிகள் முத்துக்களை உதிர்ப்பதையும் காணவேண்டும்; வேத வாத்தியங்களின் ஒலிகளையும், அருவிகளின் "கல்" என்ற ஒலியையும் கேட்க வேண்டும். இதற்காகத் திருவோணத்

# திருவோணத் திருவிழா

கீர்த்தி மூர்த்தி உ.வே.
தி.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,
திருப்பதி.



திருவிழாவின் போது வேங்கடமலைக்கு வர வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்றபடி.

பேணி வருதல் (விரும்பி வருதல்) என்பதற்குக் கருத்தாவாக (எழுவாயாக) “பக்தர்கள்” என்ற சொல்லை வருவித்துப் பொருள் கூறப்பட்டது. இனி பாட்டிலுள்ள வேங்கடவனையே கருத்தாவாகக் கொண்டு “பக்தர்கள்” என்றும், “என்னை” என்றும் செயப்படு பொருளாக வருவித்து இரண்டு வகை யாகப் பொருள் உரைத்தலும் ஏற்கும்.

திருவோணத் திருவிழாவில் உன்னைத் தொழ வேணும் என்று நினைத்துத் திருவீதியில் நிற்கின்ற பக்தர்களை நீ விரும்பி வெவ்வேறு வாகனங்களில் வருகின்ற வேங்கடவனே! என்று கூறுதல் ஒருவகை. எல்லோரும் உன்னை விரும்பி திருவேங்கட மலைக்கு வந்து மிகமிகச் சிறப்பாகத் திருவிழா நடத்தா நிற்க,

அதனை பொருட்படுத்தாமல், பேணி வரு வேங்கடவா – நீ என்னை விரும்பி நான் இருந்த இடத்திற்கு வருகின்ற (வந்த) வேங்கடவனே! என்பது மற்றொரு வகை. திருவேங்கடமதனைச் சென்று காணலுறுகின்றேன் என்பதற்கு இரு வகைகளிலும் பொருள் வேற்றுமையில்லை.

காணல் என்பதற்குச் செயப்படு பொருளாக “உன்னை” என்ற ஒரு சொல்லைச் சேர்த்து பொருள் கண்டோம். அவ்வாறன்றி “திருவேங்கடமதனை” என்று பாட்டிலுள்ளதையே செயப்படு பொருள் ஆக்கிப் பொருள் காண்போம். அதாவது நீ

## கோசம்ரக்ஷண சாலை



**திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை ஆரம்பித்தது. அதன் மூலம் தி.தி.தே. சார்ந்த ஆலயங்கள், நிறுவனங்கள், அன்னதான விடுதி போன்ற இடங்களுக்கு தூய்மையான, பசும் பாலையும், ஆலயத்திற்கு தேவையான தயிர், வெண்ணை, நெய் போன்ற பொருட்களையும் விநியோகம் செய்கின்றன. அதுமட்டுமல்லாமல் மக்கள் “கோதானம்” பெயரில் பசுக்கள், யானைகள், குதிரைகள், எருதுகள் போன்ற விலங்குகளை கொடுத்தாலும் அதனையும் பாதுகாக்கின்றது. அவற்றை உற்சவ காலங் களிலும், தீர்த்த, பருவ தினங்களில் உத்ஸவ மூர்த்திகளின் முன்னர் ஊர்வலமாக வரச் செய்கின்றன.**

**திருப்பதியில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலையின் பராமரிப்பில் உள்ள மான்கள், முதல் நடைப்பாதை மார்க்கத்தில், 7-வது மைல் அருகில் நடந்து வரும் மக்கள் கண்டு மகிழ்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பசுவை பராமரிக்கும் பிரிவு அதற்கான உணவை அதற்கு கொடுப்பது, அவற்றின் ஆரோக்கியத்தை கவனிப்பது, பால் உத்ஸவம் நிகழ்ச்சி நடத்துவது போன்றவற்றை செய்கின்றது. ஆலயத்தின் உற்சவக்காலங்களில் ஆலயத்திற்கு சீர் கொண்டு செல்வதில் பங்கு பெறுதல் போன்ற வற்றிற்கும் அவற்றினை பயன்படுத்துகின்றன.**




**கடப்பா மாவட்டத்தில் ஜம்மலமடுகு அருகில் பென்னை நதி ஓடுகின்றது. இந்நதியின் கிழக்கே நாராபுரத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் புகழ் பெற்றது. பரந்து விரிந்த இடத்தில், ஏற்றமுள்ள பிரகாரத்தின் நடுவில் அமைந்துள்ள கர்ப்பாலயத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி எழுந்தருளி, பக்தர்களுக்கு வேண்டிய வரமளிக்கும் தெய்வமாகத் திகழ்கின்றார்.**

**ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு பஞ்சாங்கத்தின்படி வைசாக சுத்த ஏகாதசி முதல் வைசாக மாதம் கிருஷ்ண பக்ஷம் சஷ்டி வரை இந்த க்ஷேத்திரத்தில் பிரம்மோத்ஸவம் நடைபெறும். இந்த வரிசையில் பிரதமை நாளில் கல்யாணோத்ஸவம், திருதியை நாளில் திருத்தேரும் கண்ணுக்கு விருந்தாக நடைபெறும். இங்கு பிரம்மோத்ஸவம் மட்டும் இல்லாமல் ரதசப்தமி, வைகுண்ட ஏகாதசி போன்ற உத்ஸவ நாட்களுக்கு பக்தர்கள் திரளாக வந்து எம்பெருமானை தரிசிக்கின்றார்கள்.**

திருமலையை விட்டு என்னை விரும்பி வந்து என்னுள்ளத்தில் புகுந்துவிட்டாய். வெகு தொலைவிலுள்ள வைகுந்தத்தில் இருந்தால் விரைந்து வந்து என்னுள்ளத்திலே புகமுடியாதென்று கருதியன்றோ, அதை அறவே விட்டுவிட்டு அண்மையில் உள்ள திருவேங்டமலையில் நீ வந்து நின்றருளியது. அங்ஙனம் நீ விரைந்து வந்து என்னுள்ளத்தின் கண் புகுவதற்குக் காரணமாயிருந்த திருமலை தன்னையே நன்றியறிவுடன் வந்து காண ஆசைப்படுகிறேன் என்றவாறு.

“நானோ திருமலையில் வந்து உன்னைக் காண விரும்பியிருக்கிறேன், நீயோ அங்கு நின்றும் என்னுள்ளத்தே வந்து உறைகின்றாய். இனி நான் என் செய்வேன்” என்றும் பொருள் கொள்ளலாமென்று காஞ்சி மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார்ய ஸ்வாமி தமது திவ்யார்த்த தீபிகை என்ற விரிவுரையில் அருளிய பொருள் மிகமிக நினைத்து இன்புறத்தக்கது.

இனி, இத்திருவந்தாதியில் இப்பாட்டுக்கு முன்னே மூன்றாம் பாட்டில் *“அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண, இழைப்பன் திருக் கூடல் கூட - மழைப்பேரருவி மணிவரன்றி வந்திழிய ஆனை வெருவி அரவோடெங்கும் வெற்பு”* என்று திருவேங்கட வெற்பினைக் கூடவும், வேங்கடவனை காணவும் கூடவும் தாம் கூடலிழைப்பதாக அருளியுள்ளதை நோக்குங்கால், இவ்வாழ்வாருக்கு திருவேங்கட நாயகன் திறத்தில் நாயகியாந் தன்மை உண்டென்றும் கொள்ளத் தகுதியுண்டு. இதற்குப் பின் ஐந்தாம் பாட்டில் *“கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய்த் தண்டவரக்கண் தலை தாளால் பண்டெண்ணிப் போம்குமரன் நிற்கும் பொழில் வேங்கட மலைக்கே போம் குமரருள்ளீர் புரிந்து”* என்று திருவேங்கடத்தானைக் குமரனாக – நித்ய யௌவனப் பருவம் உடைய புருஷோத்தமனாக இவர் அருளியுள்ளமை இக்கருத்தை வலியுறுத்தும். ஆக, திருவேங்கடமுடையானுடைய யௌவனத் தன்மைக்கும் அழகுக்கும் தோற்றுப் பெண்ணாகத்

தம்மை பாவனை செய்யும் ஆழ்வார் – தலைவி யாகிய தம் உள்ளத்துள்ளே திருவேங்கடவன் புகுந்துக்கொண்டு திருமலையில் தன் திருவோணத் திருவிழாக் கண்டருளுவதைக் காட்டிக் கொடுக்க அதையே நினைந்து நினைந்து உருவெளிப்பாடாகக் கண்டு கொண்டிருக்கச் செய்தேயும், அம்மாத்திரத் தில் மனவமைதி பெறாமல், நாயகன் எழுந்தருளி யிருக்கும் திருவேங்டத்திற்கேச் சென்று அவனை யும் திருவிழாச் சிறப்பினையும் தாம் காணுதலை யும், அவ்வெம்பெருமான் நாயகியாகிய தம்மைக் காணுதலையும் தாம் விரும்புவதாக, "காண லுறுகின்றேன்" என்று அப்பெருமானுக்கு விண்ணப் பிக்கிறாரென்று கொள்ளுதலும் பொருந்தும்.

இங்ஙனம் ஆழ்வார் சிறப்பித்துக் கூறிய திருவோணத் திருவிழா – பொதுவாக "ஓணவிழவு" என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், புரட்டாசி மாதத்தில் வரும் திருவோணத் திருவிழா என்றே கொள்ளத்தக்கது. புரட்டாசித் திருவோணமே திருவேங்கடமுடையான் திருவவதாரம் செய்து அருளிய நாளாகவும் அதையே முக்கிய நாளாகக் கொண்டு நான்முகக் கடவுள் திருவேங்கடவனுக்குப் பத்து நாள்கள் உற்சவம் செய்வித்ததாகவும் புராணங்களில் அறியப்படுவது இதற்கு அத்தாட்சி ஆகும்.

பாத்மபுராணத்தைச் சேர்ந்த வேங்கடாசல மஹாத்மியம் பதினொன்றாம் அத்தியாயத்தில்– முதலாம் க்ருத யுகத்தில் நாவலாந்தீவினில் பாரதநாட்டில், கங்கைக்குத் தெற்கே இருநூறு யோஜனைத் தொலைவிலும், கிழக்குக் கடலுக்கு மேற்கே ஐந்து யோஜனைத் தொலைவிலும் உள்ள நாராயணகிரி என்று பெயர்பெற்ற திருவேங்கட மலையில், ஸ்வாமி புஷ்கரணியின் தென்மேற்குக் கரையில், தேவர் கணங்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய லோக ரக்ஷகனாகிய பகவான் பரம புருஷன், புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்ரம் கூடிய துவாதசியில் திங்கட்கிழமையன்று ஸித்த யோகத்தில் ஸ்ரீநிவாஸனாகத் தோன்றினான் என்றுள்ளதும்,

**உத்திரகாண்ட் மாநிலம், டெஹ்ராடூன் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய தலம் "ரிஷி கேஷ்". ஹ்ருஷிகேஷ் என்பதே ரிஷிகேஷ் என்றாகியது. இத்தலத்தை "தெய்வத் திருத்தலம்" என்றும் அழைக்கின்றனர். புனிதமான கங்கை நதிக்கரையில் உள்ள இப்புண்ணிய திருத்தலத்தை இந்துக்கள் பரம பவித்திரமாகக் கருதுகின்றனர். இது இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.**

**ஸ்ரீராமபிரான் இராவணாசூரனை சம்ஹாரம் செய்ததால் உண்டான பிரம்மஹத்தி தோஷத்தை போக்கிக் கொள்வதற்காக இங்கு அதற்கான பரிகாரங்களை செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. ரிஷிகேஷ் ஹரித்துவாருக்கு சுமார் 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த ரிஷிகேஷ் வழியாக கங்கை நதி பாய்கிறது. கங்கை நதி இமாலயத்தில் சிவாலிக் மலைகளைக் கடந்து, வட இந்திய சமவெளிக்குள் பிரவேசிக்கும் பகுதியே "ரிஷிகேஷ்".**

# தெய்வத் திருத்தலம் ரிஷிகேஷ்





## ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் தொண்டமநாடு:

ஆகாசராஜனின் தம்பியான தொண்டைமான் சக்கரவர்த்தி தொண்டமநாடு மண்டலத்தில் பல ஆலயங்களை கட்டியுள்ளார். இவர் தினமும் திருமலைக்குச் சென்று திருவேங்கடமுடையானை தரிசித்து விட்டு வருவார். தொண்டைமானுக்கு வயதான பிறகு தினமும் திருமலைக்குச் சென்று இறைவனை வழிபட முடியாமல் போயிற்று. இதனால் தினமும் தன் வீட்டிற்கே வந்து தனது பூஜைகளை ஏற்குமாறு இறைவனிடம் வேண்டினார். தொண்டைமானின் வேண்டுகோளின்படி திருவேங்கடமுடையானும் ஸ்ரீதேவி பூதேவியுடன் தொண்டைமான் வீட்டிலேயே எழுந்தருளினார். திருமலையில் உள்ள ஆனந்த நிலையத்தை கட்டியதும் தொண்டைமான் தான். ஆகையினாலேதான் தொண்டமநாட்டில் தொண்டைமான் தன் வீட்டினருகே நிர்மாணித்த கோயிலின் கோபுரமும் ஆனந்த நிலையத்தைப் போன்றே நிர்மாணித்தார். ஸ்வாமியும் இங்கு அபய திருக்கரங்களுடன் ஸ்ரீதேவி பூதேவியுடன் தரிசனமளிக்கின்றார்.

பவிஷ்யோத்தர புராணத்திலுள்ள வேங்கடாசல மஹாத்மியம் பதினான்காம் அத்தியாயத்தில் – திருவேங்கடமுடையான் நான்முகக் கடவுளைக் குறித்து “லோக பிதாமஹனான பிரம்மனே! எனக்கு நீ கொடியேற்று விழாத் தொடக்கமாக ரதோத்ஸவம் முடிய, பல வாகனங்களுடன் திருநாளை நடத்தி வைக்கக் கடவாய்” என்று கட்டளையிட, அப்பிரம்ம தேவன் தொண்டைமான் சக்கரவர்த்தியிடம் இச்செய்தியை அறிவித்து, தேவசிற்பியான விச்வ கர்மாவை அழைத்து அவ்வரசனிடம் சேர்க்க, அரசன் ஆணையின்படி அச்சிற்பியும் குடை, சாமரம், ஆலவட்டம், பல வாகனங்கள், திருத்தேர் முதலிய வற்றை நிர்மாணிக்க, பின்பு பகவானுடைய உத்தரவின் கலிங்காதி தேசங்களிலிருந்து அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய பல சாதிகளைச் சேர்ந்த மக்களை வரவழைக்க, பின்னர் பிரம்மன் முனிவர்களையும் அரசர்களையும் அழைத்து அங்குரார்ப்பணம் (திருமுளை), மறுநாள் காலை துவஜாரோஹணம் (கொடியேற்றுவிழா), ஆரம்பமாக அவபிரதம் (தீர்த்தவாரி), புஷ்பயாகம் இறுதியாக உத்ஸவத்தை நடத்தினார்.

அதில் துவஜாரோஹண தினத்தில் காலை பெருமானுக்கு வாகனம் ஆளின் பல்லக்கு. இரவு சேஷ வாகனம். இரண்டாம்நாள் காலை சேஷ சயன னும் சேஷாத்ரி வாஸியும் ஸதா சேஷனிடம் அன்பு உடையவனுமாகிய பகவானுக்கு மறுபடியும் சேஷ வாகனம். இரவு ஹம்ச வாகனம். மூன்றாம் நாள் காலை சிம்ம வாகனம்; இரவு முத்து மண்டபம். நான்காம் நாள் காலை கற்பக விருக்ஷம் (புன்னைமர வாகனம்); இரவு சர்வபூபால வாகனம்.

ஐந்தாம் நாள் காலை அமரர்க்கு அமுதளித்த மோகினி வடிவம் தரித்த பெருமானுக்குப் பல்லக்கு; இரவு வேதத்தினால் வேங்கடவனுக்கு வேத மூர்த்தி யாகிய கருட வாகனம். ஆறாம்நாள் காலை ஆஞ்சநேய வாகனம்; மாலை வசந்தோத்ஸவத்தின் போது மங்களகிரி; இரவு யானை வாகனம்.

ஏழாம்நாள் காலை சூரியப் பிரபை. மாலை மலர் கொய்ய விரும்பும் மலர்மகள் மண்மகளுடன் கூடிய பெருமானுக்குத் தோட்ட உத்ஸவத்தில் மங்களகிரி; இரவு சந்திரப்பிரபை. எட்டாம்நாள் காலை திருத் தேர்; இரவு குதிரை வாகனம்.

ஒன்பதாம் நாளில் அதாவது திருவேங்கடவன் அவதரித்த புரட்டாசித் திருவோண நன்னாளில் பின் மாலை பல்லக்கு, பின்பு காலையில் சூர்ணாபிஷேகம் ஆனவுடன் மங்களகிரியில் ஏறியருளி திருவீதி வலம் வந்தபிறகு பெருமாளுக்கு ஸ்வாமி புஷ்கரிணியில் தீர்த்தவாரி; இரவு கொடியிறங்கும் விழாவில் மங்கள கிரி; பத்தாம் நாள் புஷ்பயாகம். இவையெல்லாம் முறையே நடந்தன.

இங்ஙனம் திருவேங்கடமுடையானுக்குத் திரு விழா நடத்திவைத்த பிரம்மன் அப்பிரானை வழிபட்டு அவனாணைப் பெற்றுத் தனது ஸத்ய லோகம் சென்றார். தொண்டைமான் சக்கரவர்த்தியும் அங்ஙனமே பகவானுடைய அனுமதிப் பெற்றுத் தன் ஊருக்குத் திரும்பினான் – என்றுள்ளதும் இங்கு குறித்துக் கொள்ள தக்கன.

புராணச் செய்திகளின் படி, மற்ற மாதத்திய திருவோண நாட்களை விட, புரட்டாசி திருவோணத் திருநாளுக்கே பெருமை மிக்கிருப்பதனால், திருமழிசைப்பிரானும் அத னையே தமது பாசுரத்தில் “ஓணவிழவு” என்று அருளிச் செய்திருப்பாரென்று கூறத் தடையில்லை.

உபமாகா திருத்தலம் விசாகப்பட்டிணம் மாவட்டத்தில் நக்க பள்ளி வட்டத்தில் உள்ளது. இங்கே எழுந்தருளிய ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி மிகவும் சிறப்பு வாய்ந்தவர். ஸ்வாமியை தலைமுறை தலைமுறையாக எத்தனையோ பக்தர்கள் பலவிதங்களில் சேவித்து தரிசித்தார்கள். இந்த ஆலயத்தில் பஞ்சராத்ர ஆகமப்படி ஸ்வாமிக்கு பூஜைகள், வருடாந்திர கல்யாணோத்ஸவம் (ஐந்து நாட்கள்), பிரம்மோத்ஸவம், அத்யயனோத்ஸவம், திருக்கல்யாணம், பன்னிரு ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள், ஸ்ரீராமரின் அத்யயனோத்ஸவம், வைகாச சுத்த ஏகாதசி நாளில் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி வருடாந்திர கல்யாணோத்ஸவம், தனுர்சங்கரமணம் மற்றும் பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் அந்தந்த சமயங்களில் புண்ணிய கோட்டி வாகனம், பொன்ன வாகனம், பித்தளையாலான கருட வாகனம், அரக்கினாலான கருட வாகனம், ராஜாதி ராஜ வாகனம், சப்பரம், ஹம்ச வாகனம், குதிரை வாகனம், யானை வாகனம், பெரிய பல்லக்கு, சிறிய பல்லக்கு போன்ற வாகன சேவையில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தனித்தும், உபய நாச்சிமார்களுடனும் கிராம திருவீதி வலம் வந்து அருள் புரிகின்றார். தினந்தோறும் வடக்கு வாயில் வழியாக சென்று தரிசனம் செய்வது இந்த ஆலயத்தின் சிறப்பாகும். இந்த மலை கருட வடிவில் அமைந்துள்ளதால் இம்மலை “கருடாத்திரி” என்ற சிறப்பு பெற்றது.

குழந்தையில்லாதவர்கள், ஸ்வாமிக்கு அபிஷேகம் நடைபெறும்போது வழங்கும் பஞ்சாம்ருதத்தை பிரசாதமாக அருந்தினால் குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

2015 ஆம் ஆண்டிலிருந்து, திருமலை திருப்பதி தேவஸ்தான மேலாண்மையின் கீழ் கொண்டு வந்த பின்னர் இவ்வாலயத்தில் உற்சவங்களோடு பூஜைக ளும் நடைபெற்று வருகின்றது.



திருமங்கை ஆழ்வார் பெருமாளை தரிசிக்க திருவேங்கடம் வந்தார். பெருமாளைப்பார்த்த பரவசத்தில் மகிழ்ச்சி அளவு கடந்தது. ஆழ்வாரைப் பார்த்த பரவசத்தில் பெருமாளும் இருந்தார். பெருமாள் நினைத்தார்.

*"நற்றமிழால் பாடவந்த நாற்கவி பெருமாள் இதோ வந்துவிட்டார். இனி அவர் வாயமுதத் தமிழ் கேட்டு நாம் மகிழ்வோம்''* என்ற ஒரு துடிப்பில் பெருமாள் இருந்தார். ஆழ்வாரும் சும்மாயில்லை. வேங்கடவனைப்பார்த்த மகிழ்ச்சியில் அருவியாய் அருந்தமிழை அள்ளிக் கொட்டினார்.

வேங்கடவனும் ஆழ்வாரின் தமிழால் மகிழ்ந் தான். அமுதத் தமிழ் பருகிய மகிழ்ச்சி அவன் முகத் தில் தெரிந்தது. எத்தனை குதூகலம் அவன் திருவதனத்தில்! ஆழ்வாரை கருணையோடு நோக்கிய அவன் பார்வையில் ஆழ்வாரின் உள்ளமும் இளகி யது. இப்போது அவர் தன் மனதைப்பார்த்துக் கேட் கிறார். அதில் ஒரு கேலி தெரிந்தது.

என்ன அடிமையாகிவிட்டாய் போலிருக்கிறது? நெஞ்சம் திருப்பிக் கேட்டது.

''யாருக்கு அடிமையானேன். என்ன சொல் கிறீர்கள்?'' என்ன ஒன்றும் தெரியாதவன் போல கேட் கிறாய். இந்த மலைமேல் ஆடும் கூத்தனுக்குத்தான் நீ அடிமையாகிவிட்டாய். என்ன மலையப்பன் ஆடுகின்றானா?

அவன் ஆடுகிற ஆட்டத்தில் தானே, மனமே உன் ஆட்டம் அடங்கியது. "ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே கண்ணா" என்று ஒருவர் பிற்காலத்தில் இதையே பாடப்போகிறார் பாரேன்.

நான் என்ன செய்வது? பெருமாளைப் பார்த்த உடன் நான் விழுந்து விட்டேன்.

பிறகு என்ன செய்வாய்? நின்றதும் வேங்கடம் அல்லவா!

ஆமாம்... ஆமாம் ... இந்த பெருமாளை தாமரை மலர் அணிந்த பிரம்மாவும், சிவனாரும், தேவர் தலைவன் இந்திரனும் வணங்குகிறார்கள்... அப்புறம் நான் மட்டும் என்ன?

# வேங்கடம் ஆடும் கூத்தன்

**பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963**





## இயற்கை (பாரம்பரிய) உணவு

*“உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்”* என்று நம்மாழ்வார் குறிப்பிடுவது போன்று அன்றைய மக்கள் உணவு உற்பத்தி செய்யும்போது இறைவனை வணங்கியும், இறை நாமத்தை சொல்லியும், உற்பத்தியான உணவை இறைவனுக்குப் படைத்தும், உணவை உண்ணும்போது இறைவனையே நினைத்தும் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர்.

அன்றைய இயற்கை விவசாயத்திற்கு திரும்பி அவ்வகையில் தற்பொழுது திருமலை திருப்பதி தேவஸ்தானம் சுமார் நூறு வருடங்களுக்குப்பிறகு பாரம்பரிய வழிமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களையும், நாட்டு மாடுகளின் மூலமாகக் கிடைக்கின்ற பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களையும் கொண்டு திருவேங்கடமுடையானுக்கு பிரசாதங்கள் செய்ய வழிவகை செய்துள்ளது. இன்றைய கொரோனா தொற்றிலிருந்து மீள நாம் விழிப்புணர்வோடு பாரம்பரிய வழிமுறையில் இயற்கையை சார்ந்த உணவு பொருட்களையே உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம். நம் எதிர்கால சந்ததியினரையும் ஆரோக்கியமாக வாழ வழிவகுப்போம்.

அதுசரி அங்கேபார். பலரும் பாடிப்பணிந்து ஏத்தும் காட்சியை ..... அப்படியும் உள்ளபடி அறிய முடியவில்லையே.... ஆனாலும் அவன் திருவடியில் விழுகிறார்கள்.

ஆமாம். அவன் திருவடியில் விழுந்துதான் ஆக வேண்டும். மலர் என்ற ஒன்று இருந்தால் அந்த மன்னவன் திருவடியில் விழுந்துதான் ஆக வேண்டும்..... இந்த மனமும் ஒரு மலர் அல்லவா

*”பூசும் சாந்து என் நெஞ்சமே புனையும் கண்ணி என்னுடைய*
*வாசகம் செய் மாலையே வான் பட்டு ஆடையும் அஃதே*
*தேசம் ஆன அணிகலனும் என் கைகூப்புச் செய்கையே,*
*ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த எந்தை ஏக மூர்த்திக்கே”*

என்றல்லவா பாடி இருக்கிறார்கள்.... இந்த மனதை அவன் திருவடியில் சமர்பிப்பதுதானே ஆத்ம சமர்ப்பணம்... அதற்குத்தானே பரமபதத்தை விட்டு இந்த பாரத பூமியை நாடிவந்து மலைமேல் காலம் காலமாய் நிற்கிறான். அடடா, பிரம்மலோகம், சிவலோகம், இந்திர லோகம் எல்லாம் இங்கே வந்து விட்டதே... ஆயினும் மனசே, எனக்கு உன்னை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

ஏன் பரிதாபம்? நேற்றுவரை நீ எப்படி இருந்தாய்?

எப்படி இருந்தேன்?

பூர்வ அவஸ்தையில் தவித்துக் கிடந்தாயே.

புரியவில்லை.

உனக்குப் புரியாது ... இருந்தாலும் சொல்கிறேன். உண்டதையே உண்டு, உறங்கிய பின் மீண்டும் கண்டதையேப் பேசி களிப்புற்றுக் கிடந்தாயே நினைவில்லையா. சம்சாரிகள் விஷய சுகங்களில் மண்டி கிடப்பார்கள். நீயும் அவர்களோடு சேர்ந்து கூடி ஆடி கும்மாளமிட்டாயே. உருப்படியாக ஒரு பலனும் இல்லாமல் தேவையற்ற விஷயங்களைப் பேசினாயே..... இப்படி கூடி ஆடிப் பேசி திரிந்த நீ, எல்லாவற்றையும் மறந்துவிட்டு இங்கு வந்த பிறகல்லவா திருந்தினாய். விடிவு காலம் பிறக்க வேங்கடம் வந்தது உனக்கு நல்லதாகப் போயிற்று... அப்படியே மாறிவிட்டாய்.

உன்னுடைய குணங்களை விட்டுவிட்டு அந்த அனந்தனின் திருவடியில் விழுந்து அடிமைத்தொழில் பூண்டாய். என் நெஞ்சமே! காலம் கடந்து செய்தாலும் இச்செயல் எனக்கு அளப்பரிய மகிழ்ச்சியைத் தருகிறது. மகிழ்ந்தேன் நான், நீ வாழ்க.

இப்படி தன்னுடைய நெஞ்சத்தை வாழ்த்துகின்றார் திருமங்கையாழ்வார். மாறாத மனமும் மாற ஒரே வழி மலையப்பனின் திருவடிவாரம்தான் என்று திருமங்கையாழ்வார் சொல்லும் அற்புத பாடல் இதுதான்.

*“கூடி யாடி யுரைத்ததே யுரைத்தாய்*
*என் நெஞ்ச மென்பாய் துணிந்து கேள்,*
*பாடி யாடி பலரும் பணிந்தேத்திக் காண்கிலா*
*ஆடு தாமரையோனு மீசனும்*

*அமர்கோனும் நின்றேத்தும், வேங்கடத்து*
*ஆடு கூத்தனுக் கின்று*
*அடிமைத்தொழில் பூண்டாயோ''*

என்பது பெரிய திருமொழி பாசுரம்.

**விளக்கவுரை:**

கூடியாடி உரைத்ததே உரைத்தாய், என்றவிது தமது நெஞ்சின் பூர்வாவஸ்தையைச் சொல்கிறார். நெஞ்சே! நீ நேற்றுவரை எப்படி பொழுது போக்கித் திரிந்தாய். இன்று எப்படியானாய்! என்று ஆச்சரியம் தோன்ற அருளிச் செய்கிறார். நீ நேற்று வரையில் விஷயாந்தரங்களிலே மண்டித்திரிகிற ஸம்ஸாரிகளோடு கூடியும், அவர்கள் அநுபவிக்கிற விஷயங்களையே அநுபவித்தும், அவர்கள் பேசுகிற பேச்சுக்களைபேசியும் போந்தாயன்றோ; இப்படியிருந்த நீ இன்று திடீரென்று எப்படிபட்ட நிலைமைக்கு வந்துவிட்டாய். நீ பெற்ற பாக்கியம் நீ அறியவில்லையாகையால் நான் எடுத்துச் சொல்கிறேன், அன்புடன் கேளாய் நெஞ்சமே!; பக்திக்கு போக்கு விட்டு பாடியுமாடியும் பலரும் பணிந்தேத்தி அவ்வளவிலும் முடியாதவனும் பிரம்மன், சிவனிந்திரன் முதலான மேலாத் தெய்வங்கள் மேவித்தொழப் பெற்றவனுமான திருவேங்கடமுடையான் திறத்திலே அடிமைத் தொழில் பூண்டாய் என்கிறார்.

இரண்டாமடியின் முடிவில் "காண்கிலா" என்றும், "காண்கிலார்" என்றும் பாடபேதமுண்டு. காண்கிலா என்பதைத் திருவேங்கடமுடையானுக்கு விசேஷமாக்கியுரைத்தல். ஒரு யோஜனை தாமரையோனுக்கும், ஈசனுக்கும், அமரர்கோனுக்கும் விசேஷணமாக்கியுரைத்தல் மற்றொரு யோஜநை. தங்களைப் பணிந்தவர்களுங்கூடத் தங்களைக் காணப்பெறாத படியான ஏற்றமுடைய பிரமன் முதலியோர் நின்று ஏத்தப்பெற்ற திருவேங்கடமுடையான் என்கை.

ஆடு தாமரையோன் – "ஆடு" என்று வெற்றிக்குப் பெயர். வெற்றியையுடைய பிரமன் உலகங்களைப் படைக்க வல்லவனாகையாகிற ஸாமர்த்தியம் வாய்ந்த பிரமன் என்கை.



திருமலையில்

## நவநீத சேவை



**திருமலையில் 2021, ஆகஸ்ட் 30 ஆம் தேதி ஸ்ரீகிருஷ்ணாஷ்டமியை முன்னிட்டு திருப்பதி கோசாலையில் நாட்டு பசுக்களின் வாயிலாகப் பெறப்பட்ட பாலிலிருந்து பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட தயிரை ஆலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள் மற்றும் பல உயர் அதிகாரிகளுடன், கோலகலமாக ஸ்ரீவாரி சேவகர்களுடன் கோலாட்டம், பஜனை முதலிய நிகழ்ச்சிகளுடன் திருமலையில் தொடங்கினார். இதுவே "நவநீத சேவை" ஆகும். தினமும் ஆலயத்திற்கு தேவையான வெண்ணெய் இங்கிருந்து "நவநீத சேவை" வாயிலாக பெறப்படுகிறது.**













சென்ற இதழின் தொடர்ச்சி...

*''சப்தபெடெகளு தப்த காஞ்சனதந்தெ!*

*சப்தவன நிதி*

*சப்த த்வீபதமத்யா!....''*

ஏழுமலை பொன் போன்று ஒளிமயமாகவும், சூரியகிரணங்கள் போன்று பிரகாசமாகவும் காட்சி தருகின்றது. இம்மலையை வர்ணிப்பது மிக அரிது. இங்கு உள்ள மிருகங்கள், தீர்த்தங்கள், பறவைகள் ஆகியவை பல விதங்களில் அழகைத் தருகின்றன. செடிகொடிகள், பழங்கள், குகைகள், புஷ்கரணி, மற்றும் மலைகளின் அழகு, அவை நடுவே தேவதைகளும், கருடர், கந்தர்வர்கள், கின்னரர், கிம்புருடர் முதலானோரும் தம் கண்ணுக்குப் புலப்படாமல் சுற்றி வரும் அழகு ஆகியவற்றை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாதவை. மேலும், ஸ்வாமியின் அருளைப் பெரும் அழகு வார்த்தைகளால் வர்ணிக்க இயலாதவை. மேலும், ஸ்வாமியின் அருளைப் பெற்ற பக்தர்கள் இங்கே பலர் உள்ளனர்.

ஆதிவராக க்ஷேத்ரமாக அழைக்கப்படும் திருவேங்கட மலையில் புஷ்கரணியின் அருகே வராகஸ்வாமி தரணி தேவி சமேதராக உள்ளார். இவரைப் பற்றி 5 சரணங்களில் விஜயதாசர் துதித்துப் பாடியுள்ளார். பிரம்மா நாபியிலிருந்து தோன்றிய வராக ஸ்வாமி, இரண்யாக்ஷன் பூமியைக் கைப்பற்றிய போது, தேவதைகளின் வேண்டு கோளிற்கிணங்கி, அந்த அசுரனை அழித்து பூதேவியைக் காப்பாற்றினார்.

*''தயவிரலிதய விரலிதரணி தரனே''* மற்றொரு மூன்று சரணங்களுடன் கூடிய கீர்த்தனையில் வராகஸ்வாமியைத் துதித்துப் பாடியுள்ளார். விஜய தாசரின் அனைத்து கீர்த்தனைகளும் மிகவும் புகழ் பெற்றவை. இவர் மனதில் ஸ்ரீநிவாசனை நினைத்தவுடனே மழை போன்று கீர்த்தனைகள் பாடும் தன்மை பெற்றவர்.

*''அம்பரவு தாம்ர மயவாகெ...''* என்ற முதல் சரணத்தில் ஆகாயம் தாமிரம் போன்ற நிறத்தைக் கொண்டுள்ளது. அருணன் வேகமாக சூரிய இரதத்தை ஓட்டுகின்றான். சந்திரனின் ஒளி மங்கியது. நட்சத்திரக் கூட்டம் ஒன்றும் கண்ணுக்குப்





## தாஸ சாகித்யத்தில்...

# திருமலை இயற்கை அழகு

புலப்படவில்லை. தாமரை மலர்களின் மொட்டுகள் விரியத் தொடங்கின. பூமியின் இருள் நீங்கி ஒளி மயமாகக் காட்சி தந்துள்ளது. தாமரை மலர்களின் உள்ளே தேனீக்கள் நுழைந்து தேனை உண்கிறது. கோழி கூவியது, சேவல் கொக்கறிக்கிறது. ஸ்வாமி! பக்தர்களின் துயரத்தை நீக்கி காப்பாற்றி துயில் எழு, கமல தயாளா எழுந்திரு என்று கூறுகிறார்.

உதய பர்வதத்தின் மேல் மார்த்தாண்டன் இரதத்தை ஓட்டினான். சூரியோதயம் ஆனது. கடல் அலைகள் குறைந்தன. பாவங்கள் அதிகரித்தன. தானவர்கள் பயத்துடன் நடுங்குகின்றனர். சங்கு, மத்தளம் முதலான வாத்தியங்களால், சரிகமபதநி என மேளங்களுடன் தேவதைகள் உம்மேல் பூமழையைப் பொழிந்து துதிக்கின்றனர்.

*“நாரியருபந்து அங்களபளிதுகந்தத...”*

மாதர்கள் வந்து உம் ஆலயத்தின் முன் உள்ள பிரகாரத்தை தூய்மை செய்து, அதன் மேல் திவ்ய சந்தனத்தை நீருடன் சேர்த்து தெளித்து, அதன்மேல் 5 வண்ணங்கள் கொண்ட கோலமிட்டனர். அதுமட்டு மின்றி பச்சை தோரணங்களை வாயிற்படியில் கட்டி அழகு படுத்தினர். உற்சாகத்துடன் பக்தர்கள் உம்மை துதித்து வணங்குகின்றனர். காவலாளிகளோ உம்மை புகழ்கின்றனர். ஹே கம்சாரி, கோனேரிவாசா பக்தர் களைக் காக்க துயில் எழுவாய்!

*“நருத்யதவரு பந்து ததிகிணி ததைய்யா...”*

நாட்டியமாடுபவர் மிருதங்க ஒலிகளுக்குத் தகுந்தவாறு தாள ராகத்துடன், முப்பத்து மூன்று ராகங்களுடன் பாடல்கள் பாடியவாறு ஆடல் புரிய மற்றும் சில பெண்கள் முத்து ஆரத்தியை கையி லேந்தி உம் திருவடிகளைத் துதித்தவாறு நின்று கொண்டுள்ளனர். பக்தர்களைக் காப்பவனே துயில் எழுவாயாக!

*“துடிகெதாள சங்க தம்பூரி, ஜாகடி...”*

தம்பூரா, தாளம், சங்கு முதலிய இசைக்கருவி களைக் கையிலேந்தி பரமபக்தர்களான ஹரி தாசர்கள் உம் முன்னர் நின்று உலகெலாம் எதிர் ஒலிக்குமாறு, காலிற்கு சலங்கைகளைக் கட்டிக் கொண்டு, அபிநயத்துடன் உம்மைப் புகழ்ந்து பாடலைப் பாடிக்கொண்டு ஆடல் புரிகின்றனர்.

ஹே! சேஷகிரிவாசா பக்தர்களைக் காப்ப வனே! ஸ்வாமி துயில் எழுவாயாக !!



## திருமலை கருடன்





**“கரு” என்பதற்கு சிறகு என்று பொருள். “ட” என்றால் பறப்பவர். சிறகுகளைக் கொண்டு பறப்பவர் என்பதே இத்திருநாமத்திற்குப் பொருள். சிறகுகளைக் கொண்டு, நினைக்கவும் இயலாத அதிவேகத்தில் பறக்கும் திறனைப் பெற்ற கருடன் ராஜ பக்ஷி பறவைகளின் தலைவன் என்று சொல்வார்கள். அனைத்து விஷ்ணு கோயில்களி லும் காணப்படுவார். கருடனை போன்ற வடிவில் திருமலையில் இயற்கையாகவே மலை முகடு அமைந்திருப்பது மிகவும் சிறப்பான ஒன்றாகும். திருப்பதியிலிருந்து திருமலை செல்லும் வழியில் கருடாழ்வாரின் தரிசனத்தை முதலில் பெற்ற பின்னர் திருமலையை ஏற இயலும்.**

*"காதோத கவிமலகஸ்தூரி கம்மெண்ணே ...*
*பரமபுருஷா ஏளு!!"*

பக்தர்கள் எல்லாம் உமக்காக, வெண்ணீர், கஸ்தூரி, ஜவ்வாது முதலிய நறுமணப் பொருட்கள், கண்ணாடி, தங்க பீடம், பாதுகைகள், பட்டு வஸ்த் திரங்கள், அழகுமிகுந்த ஆபரணங்கள் அனைத்தை யும் கையிலேந்திக் கொண்டு தங்க வாயிலின் முன் நின்று கொண்டுள்ளனர். ஹே! ஆதி ஹரி பரும புருஷா! பக்தர்களைக் காப்பவனே துயில் எழுவாய்!

*"கோத்ராரி ஹரி தர்ம புண்யஜன வருணா ...*
*தாத்ரி களத்ரதேவா"*

இந்திரன், அக்னி, தர்மர், வருணர், வாயுபுத்திரர், குபேரன், நைருதி, ஈஸ்வரன், சூரியன் முதலான தேவர்கள் உம் தரிசனத்திற்காக தத்தம் வாகனங் களுடன் வருகை புரிந்துள்ளனர். அவ்வாறே மைத்ரா வரணன், ஜமதக்னி, காஸ்யபர், விஷ்வாமித்ரர், பரத்வாஜர், நாரதர் முதலான முனிவர்கள் எல்லாம் ஸ்தோத்திரங்களால் உம்மை புகழ்ந்து கொண்டு உள்ளனர். அதாவது, "நீயேகதி" என்று அடைக்கலம் வந்துள்ளனர். பக்தர்களைக் காப்பவனே! எழுந்திராய்!

*"நித்ய ஏளுவ சமயமீரிது இந்திக...*
*சச்சிதானந்தாத் மகா"*

நாள்தோறும் தாங்கள் துயில் எழும் நேரத்தை விட அதிக நேரமானது, இன்று ஏன் எழவில்லை? துரு பதன் உமக்கு செய்தது என்ன? சௌகாதன் உமக்கு செய்தது என்ன? நரபுண்டரிகன் உமக்கு என்ன கொடுத்தார். இவர்கள் எல்லாம் பக்தியுடன் பூஜித் தனரே தவிர வேறு எதுவும் தரவில்லை ஸ்வாமி.

*"தாசர மனயல்லி வாசவாகி த்தவநானு"*

குருபக்தியுடன் விஜயதாசர் புரந்தரதாசரைப் பார்த்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டார்.

புரந்தர தாசரின் வீட்டில் இருந்தவன் நான், தாசரின் அருகே இருந்தவன் நான், தாசரின் வீட்டிற்கு



## கோயிலுக்கொரு கோமாதா

மனித குலத்திற்கே பசு ஒரு வரப் பிரசாதமாகும். பசுவின் திருமேனியில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தேவதை வசிப்பதாக புராணங்களும் கூறுகின்றன.

பவிஷ்யோத்ர புராணத்தில் (அத்தியாயம் 156,16.20) ஸ்ரீகிருஷ்ண பகவான் பசுக்களை தானம் செய்வதன் முக்யத்துவத்தைப் பற்றி கூறுகின்றார். மேலும், பசுக்கள் அனைத்து தெய்வங்களின் உறைவிடம் மற்றும் தூய்மையின் உருவம் என்கிறார். எனவே தான் பசுக்களை வணங்குவது மிகவும் முக்கியமானதாகும். அதிகாலையில் பசுவை காண்பதும், பூஜிப்பதும் நன்மையளிக்கும். பசுவை தொடுவது தீர்த்தத்தை சேவிப்பதற்கு சமமாகும். பசுக்களை தானம் செய்வது என்பது தர்மத்தின் மிக உயர்ந்த செயலாகவே கருதப்படுகிறது.

நாடு முழுவதிலும் பசுக்களை பராமரிக்க "கோயிலுக் கொரு கோமாதா" திட்டத்தை அண்மையில் தி.தி.தே. அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக முதல் பசுவினை விஜயவாடாவில் உள்ள கனகதுர்கா அம்மன் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது. எந்த ஒரு பக்தரும் இத்திட்டத்தின் கீழ் பசுக்களை நன்கொடை யாக வழங்கலாம். பின்னர், நன்கொடையாகப் பெறப்பட்ட பசுக்கள் பல்வேறு கோயில்களுக்கும் வழங்கப்படும். தி.தி.தே.வின் இந்த உன்னத திட்டம் நாட்டின் அமைதி, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி ஆகியவற் றிற்காகவும் மற்ற ஆலயங்களிலும் இந்த கோமாதா வழிபாட்டை ஊக்குவிப்பதற்கே ஆகும்.



தண்ணீர் கொண்டுவந்தவன் நான், தாசரின் வீட்டில் உணவு உண்ட பின் அந்த இலைகளை எடுத்தவன் நான். தாசர் உண்ட உணவை உண்டவன் நான், தாசர் வீட்டின் முன் இரவு நேரத்தில் கண்விழித்து காவலாளி யாக இருந்தவன் நான், தாசரின் கண் முன் வளர்ந் தவன் நான், புரந்தர தாசர் மீது கருணை கொண்ட ஸ்வாமி என்னையும் காப்பாற்றுவாயாக.

விஜயதாசர் தம் கடந்த கால நிகழ்வுகளை ஒரு முறை நினைவிற்கு கொண்டு வந்து கண்ணீருடன், ஸ்வாமி பதினான்கு உலகைக் காக்கும் உமக்கு நான் ஒருவன் மட்டும் சுமையாகி விட்டேனா? என்று மனம் வருந்தி வழிபட்டார். ஸ்வாமி! உம் ஆழ்ந்த உறக்கத் திற்கு என்ன காரணம்? நான் சொல்லும் வார்த்தைகள் உம் காதில் விழவில்லையா? சச்சி தானந்தாத்மகா துயில் எழுவாய்!

மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசு ராம, ராம, கிருஷ்ண, புத்த, கல்கியாவதாரம் ஆகிய பத்து அவதாரங்களை உடைய வேங்கடவனைக் கண்டு துதித்துப் பாடினார்.

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# தாஸ சாஹித்யத் திட்டம்

தமிழகத்தில் ஆழ்வார்களைப் போன்று கன்னடத்தில் ஹரிதாசர்கள் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். இவர்களை "கன்னட ஹரிதாசர்கள்" என்று அழைப்பர்.







ஹரிதாசர்கள் கன்னட மொழி களில் வேதங்கள், உபநிடதங்கள் புராணங்களில் திருவேங்கடமுடையானை புகழ்ந்து ஆயிரக்கணக்கான கீர்த்தனை களை இயற்றியுள்ளார்கள்.

ஹரிதாசர்களை பெருமை படுத்தும் விதத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் தாஸ சாஹித்யத் திட்டம் என்று உருவாக்கி ஹரிதாசர்களின் கீர்த்தனைகளை பல்வேறு புத்தகங்களாகவும், ஒலி வடிவிலும் பக்தர்களுக்கு அளித்துள்ளனர்.

புரந்தரதாசர் சிலையை திருப்பதி அலிபிரியில் அமைத்துள்ளனர். ஆண்டு தோறும் படிவிழா (மெட்லோட்சவம்)வும், புரந்தரதாசர் ஆராதனையும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.





# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 62



**இடமிருந்து வலம் :**

1. திருவேங்கடமுடையான் ஆலய கோபுரத்தின் பெயர்....(11)
5. புளிய மரத்துக்கு வடமொழிச் சொல்........(9)
6. ஆகாச ராஜனின் மனைவி பெயர்..(5)
7. ஸ்ரீதேவி வைகுந்தத்தினின்று பூலோகத்திற்கு வந்த இடம் .....(6)
10. சேஷாசலத்துக்கு அடுத்திருந்த சோழ ராஜ்ஜியம்.....(6)
11. வேங்கடவன் பெயரை ஒட்டி திருமலையின் பெயர்......(6)
13. நாராயணபுரத்தில் சேஷாசலபதி பத்மாவதி தாயார்......(10) முகூர்த்தம் நடைபெற்றது.

**வலமிருந்து இடம் :**

2. குழந்தை வரம் வேண்டி ஆகாச ராஜன் ...(11) பண்ணினான்.
9. இடையன் புற்றின் மீது பாலைச் சொறிந்த பசுவை ....(3) யைக் கொண்டு தாக்கினான்.
12. ......(4) வேடம் பூண்டு வேங்கடவன் பத்மாவதியின் தாயார் இருக்கும் இடத்தை அடைந்தார்.
14. ஸ்வாமியின் கர்ப்பக்ருஹத்தில் அமைந்துள்ள மூலவரையும் நான்கு உத்ஸவ மூர்த்திகளையும் சேர்த்து .....(6) என்று அழைப்பர்.
18. தாயாருக்கு ....(3) என்ற பெயரும் பிரசித்தி பெற்றது.
19. திருமலை ஆதி....(8)
24. பலி பேரர்....(3) ஸ்ரீநிவாச மூர்த்தி.

**மேலிருந்து கீழ் :**

3. மலை மீது அமைந்துள்ள தீர்த்த குளம்....(8)
8. ஸ்ரீநிவாசனுக்கு வைகுந்தத்தில் இருந்த போது பெயர்......(7)
11. சீதாதேவியின் முற்பிறவிப் பெயர்....(4)
13. கீழ்நகரம் திருப்பதி மேல் நகரம்....(4)

தொகுப்பு :
திரு. டி.டி. வரதராஜன், சென்னை,
9791998950

புதிருக்கு விடை அறிய
23ம் பக்கம்
பார்க்கவும்...

16. ஸ்வாமிக்கு வாகனமாகவும் கொடியாகவும் இருப்பவர்....(4)
17. பெருஞ்செல்வத்தை அதாவது .....(3) யை வாரி வழங்குபவர் ஏழுமலையான்.

**கீழிருந்து மேல் :**

4. தேவர்களின் குரு.... (4) பதி.
15. ஆஞ்சநேயருக்கு வேறொரு பெயர்.....(3)
20. கௌஸ்துப பேரர்.....(2) ஸ்ரீநிவாசமூர்த்தி.
21. ....(4) ஆயிரம் சூழ வலம் வந்து நாச்சியார் திருமொழி.
22. ஸ்நபன பேரர்....(3) ஸ்ரீநிவாஸ மூர்த்தி.
23. ....(4) நட்சத்திரத்தில் திருவேங்கடவன் அவதரித்தார்.

# வாகன சேவையில் வேங்கடவன்

திருமதி ராதா ராமநாதன், திருப்பதி,
79814 63638

தனது ஆராதனை தெய்வமான வேங்கடவன் மீது 32,000 கீர்த்தனைகளை இயற்றிப் பாடி பரவசித்த அன்னமய்யா பிரம்மோத்ஸவ வாகன சேவைகளைப் பற்றியும் பாடி பாமாலை சாற்றியுள்ளார். அவற்றுள் சிலவற்றை மட்டும் எடுத்து தமிழில் அவற்றின் பொருளை அறிந்து மகிழ்வோம்.

*''தொழுவார் வினைச்சுடரை நந்து விக்கும்
வேங்கடமே
வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை''*

(மு.தி.-26) பூமியில் பிறந்தோரின் முன்வினைகளை ஓட்டும், தேவர்களின் தெய்வீகத் தன்மையை மேம்படுத்தி சக்தியூட்டும் மலையாதலால் பிரம்மோத்ஸவத்தின் போது விண்ணோரும் மண்ணோரும் இணைந்து வேங்கடவனை வணங்கி நிற்பர். அப்போது கோலாகலமாக காலையும் மாலையும் நடைபெறும் வாகன சேவைகளைப் பற்றிய அன்னமய்யாவின் பாடல்களில் சிலவற்றைக் காண்போம்.

*''திருவீதுல மெரஸீதேவதேவுடு
கரிமல மிஞ்சின சிங்கார மூல தோடனு''*

என்ற பாடலில் பிரம்மோத்ஸவத்தில் நடைபெறும் வாகனங்களை பட்டியல் இடுகிறார் அன்னமய்யா. முதல் நாள் காலை கொடியேற்றமும், மாலை சிறிய சேஷ வாகனமும், இரண்டாம் நாள் காலை பெரிய சேஷ வாகனமும் நடைபெறும்.

**சேஷ வாகனம் :**

நின்றால் குடையாகவும், அமர்ந்தால் ஆசனமாகவும், படுத்தால் பஞ்சணையாகவும் இருக்கும் ஆதிசேஷனை இவ்வாறு வர்ணிக்கிறார்.



*''வீடுகதே சேஷுடு
வெங்கடாத்ரிசேஷுடு
வேடுக கருடுனிதோ
பென்னுடைன சேஷுடு''*

என்ற பாடலில் சேஷ வாகனத்தை வெறும் விக்ரகமாக இன்றி ஆதிசேஷன் உயிரோடு நிற்பதாகவே பாவிக்கிறார். சேஷகிரி வாசனான ஸ்ரீநிவாசன் முதல் நாள் சேஷ வாகனமேறி வருகிறான். வேங்கடாத்ரி மலையில் சேஷனும், கருடனும் நட்புடன் இணைந்திருக்கின்றனர். ஆயிரம் தலைகளுடன் படம் விரித்து வைரம் போல் ஒளி விடும் மேனியுடனும், சிரசில் மாணிக்கம் ஒளிவிட காட்சி தருகிறான். எப்போதும் ஹரிக்கு நிழல் தரும் குடையாக உள்ளவன், இங்கு பொன்னால் ஆன வாகனமாக இருக்கின்றான். ஹரியினால் புகழப் பெறும் திறமை வாழ்ந்தவனான அவன் தனது இரண்டாயிரம் நாவுகளையும் வெளியில் நீட்டித் துழாவிய வண்ணம், ஹரி தனக்கு எப்போது பணியை ஏவுவான் என்று தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறான். வேங்கடபதியையும் அலர்மேல்மங்கையும் தாங்கி அவர்களுக்கு பஞ்சணையாய் இருப்பவன்.









அன்னமய்யா வாகன சேவைகளைப் பற்றிய பாடல்களில் சிலவற்றையே இங்கு உள் நுழைந்து மகிழ்ந்தோம். அப்பாடல்களின் ஒலிநயத்தையும் தாள லயத்தையும், அவற்றுக்குப் பொருத்தமாக ராகங்கள் அமைந்துள்ளமையையும் அறியலாம்.

**கருட வாகனம் :**

ஐந்தாம் நாள் மாலை கருட வாகனம் பற்றிய அன்னமய்யா பாடல்.

*“இடு கருடனி நீ வெக்கினனு*
*படபடதிக்குலு பக்கென பகிலெ*
*எகசின கருடனியேபுன “ட்டா” யனி*
*ஜிகிதொலக சபுடு சேசினனு*
*நிகமாந்தம்புலு நிகமசங்கமுலு*
*ககனமு ஜகமுலு கடகடவடகே”*

கருடனின் மீது வேங்கடவன் ஏறி அமர்கின்றான். உடனே கருடன் தனது இறக்கைகளை பட பட வென்று அடித்துக் கொண்டு கிளம்புகிறான். திக்குகள் பக்கென்று வெடித்தன. அவன் சற்றும் தாமதிக்காமல் விர்ரென்று மேலே கிளம்புகிறான்.




வஸந்த காலமான சித்திரை மாதத்தில் அனைத்து ஆலயங்களிலும் வஸந்த உற்சவம் என்ற சிறப்பு உத்ஸவம் நடை பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் முக்கியமான உத்ஸவமாகும். ஆலய சம்பிரதாயப்படி வஸந்தோத்ஸவம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. திருமலையில் சைத்ர மாத வளர்பிறை திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்கள் வஸந்தோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறும். வசந்தோத்ஸவ மண்டபத்தில் வருடாந்திர வஸந்தோத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த மூன்று நாட்களும் வஸந்த மண்டபத்தில் சிறப்பு ஸ்நபன திருமஞ்சனம், தீபாராதனைக்குப் பின்னர் உத்சவ மூர்த்திகள் மாட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்திற்குள் எழுந்தருளுகின்றனர்.



# திருமலையான் ஜ்யேஷ்டாபிஷேகம்

ஜ்யேஷ்ட (ஆனி) மாதம் ஜ்யேஷ்டா (கேட்டை) நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நாளன்று முடிவடையும் இந்த ஜ்யேஷ்டாபிஷேக உற்சவம் திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கு வைகானச ஆகமப்படி, பரிஹார, சாந்தி ஹோமங்கள், திருமஞ்சனம், புறப்பாடு போன்றவை நடைபெறுகிறது. திருமலையப்ப ஸ்வாமியை நிஜவடிவிலும், வைரம், முத்து, தங்கம் ஆகிய மூன்று கவசங்களிலும் தரிசிக்கும் மகத்தான பாக்கியம் கிடைக்கிறது. ஜேஷ்டாபிஷேகத்திற்கு "அபித்யேயக அபிஷேகம்" என்ற பெயரும் உண்டு. திருமலையப்ப ஸ்வாமியையும் ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்களையும் பாதுகாப்பாக மூடியிருக்கும் அபித்யேயக கவசங்கள் என்பதால் இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

வேதசாரமான வேதாந்தங்கள், வேதங்கள், வானம், பூமி அனைத்தும் கடகடவென்று நடுங்குகின்றது. கருடனை விரைவாகச் செல்லுமாறு வேங்கடவன் விரட்டுகின்றான். பூமியில் சிறிய புழு, பூச்சிகள் முதல் ஜீவராசிகள் அனைத்தும் நான்கு திசைகளிலும் சுழன்று சுழன்று பறக்கின்றன. திருமலையில் பொன்னாலான கருடனின் மேல் நீ அமர்ந்த உடன் அரக்கர் கூட்டங்கள் கூட உன் மகிமையையுணர்ந்து, உன் மேல் பக்தி பூண்டு பரவசமடைகின்றனர். அன்னமய்யா கருடன் மேலெழுப்பும் போது உள்ள வேகத்தை ஓசைநயத்தோடு மிகவும் அருமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

**ஹனுமந்த வாகனம் :**

6-ம் நாள் மாலை ஹனுமந்த வாகனம்.

*"ஓ பவனாத்மஜ! ஒகனுடா!*
*பாபு பாபனகா பரகிதிகா*
*ஓ ஹனுமந்துடா! உதயாசல*
*நிர்வாஹக நிஜ சர்வப்ரபலா*
*தேஹமு மோகின தெகுவகுநிடுவலெ*
*சாஹஸமிடு வலெசாடிதிகா"*

ஓ பவனாத்மஜா! புகழ் பெற்றவனே! காற்றைப்போல் விரைந்து வந்து காப்பவனே! சூரியனைப் போன்று ஒளி

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 62க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ன | ந் | த | நி | லை | ய | வி | மா | ன | ம் | 3 ஸ் |
| ம் | க | யா | டி | ஷ் | மே | கா | ர | தி | த் | 2 பு | வா |
| 5 தி | ந் | தி | ரி | ணி | வி | ரு | க்ஷ | ம் | | | மி |
| 6 த | ர | ணி | தே | வி | 7 கொ | ல் | ஹா | பு | ர | ம் | பு |
| 10 ச | ந் | தி | ர | கி | ரி | | ரி | ட | 9 கோ | 8 வை | ஷ் |
| 11 வே | ங் | க | டா | த் | ரி | | தி | த் | ற | 12 கு | க |
| த | ண | 19 வ | ரா | க | க்ஷே | த் | தி | ர | ம் | ந் | ரி |
| வ | வோ | | | 20 போ | | | | | ம் | த | ணி |
| 13 தி | ரு | 17 மா | ங் | 16 க | ல் | ய | தா | ர | ண | வா | ஸ் |
| ரு | 23 தி | நி | 18 ஸ்ரீ | ரு | | | | க் | ர | ஸ | ஹ |
| ம | ரு | தி | | ட | வு | லு | 24 கொ | 22 உ | 21 வா | ன் | ரு |
| லை | 15 மா | | | ன் | ர் | ர | பே | ச | ஞ் | 14 ப | 4 பி |

வீசுபவனே! அகிலத்தையே தாங்கும் நாயகனது மேனியைச் சுமந்து உனது தைரியத்தையும் சாகசத்தையும் நீ நிரூபித்துக் கொண்டாய். சூரியனை பழமென்று பறிக்கப் போய் சூரியனையே மறைத்து கிரகணத்தை உண்டாக்கியவனே!

அரக்கர்களின் மனத்தையும் மாற்றக் கூடியவனே! வினதையின் புதல்வர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வினதையையும் அதன் மூலம் சர்ப்பஜாதியையும் காப்பாற்றத் தோன்றியவனே! தசமுகனான இராவணனை அழிப்பதற்குக் காரணமானவனே! இவ்வுலகையே தாங்கும் வேங்கட பதியின் தேகத்தை உன் மீது தாங்கும் பெருமையைப் பெற்றவனே! என்று பலவாறாக சிறியத் திருவடியைப் போற்றி வணங்குகின்றார் அனனமய்யா.

**ரதோத்ஸவம் :**

அமரர்கள் ஆடி வர, பிறமத கணங்கள் பாடியும் வர, கருட வாகனன் பொன் ரதமேறி வருகின்றான். இந்திர ரதமேறி அவனோடு சேர்ந்து திக்குகளை வென்று ஜெயக்கொடி நாட்டி வருகிறான் கோவிந்தன். பிரம்மா, சிவன், ஆதிசேஷன் அவனுக்கு சேவை புரிகின்றனர்.

தேவியர் இருவருடன் கூடி கல்யாண கோலத்தில் பொன் ரதமேறி வருகையில் நித்ய சூரிகள் அவனை புகழ்ந்துப்பாடுகின்றனர். அந்த ரதம் பலவித மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, சுற்றி கட்டப்பட்டுள்ள குச்சிகள் அசைய வருகின்றது. பேரிகைகள் முழங்குகின்றன. தேவர்கள் ஜய கோஷம் இடுகின்றனர்.

சந்திர சூரியர்களைத் தன் இரு கண்களாகக் கொண்ட கருடத்ஜயன் ரதமேறி வருகையில், வேத விற்பன்னர்கள் இடும் வேத கோஷம் விண்ணை எட்டுகிறது. அது துஷ்டர்களை அழித்து ஜய கோஷம் எழுப்புவதைப் போன்றுள்ளது.

அங்கு நடக்கும் ஆடல், பாடல் கேளிக்கைகளைக் கண்டும் கேட்டும் களித்தும் தேவியர் இருவருடனும் வேங்கடபதி சிங்காரமுடன் ஆனந்தமாக நம் வீட்டு வாயிலில் நின்று கோடான கோடி வரமளிக்க சித்தமாக நின்றுள்ளார். அவரிடம் வேண்டும் வரம் கேட்டு வாழ்வை வாழ்வாங்கு வாழுங்கள்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ *0877–2264592.*

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ *0877–2264584.*

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது.

☎ *0877– 2264587.*

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*

# திருவேங்கடம் அடை நெஞ்சமே

திரு. ஜெ. சுவாமிநாதன்,
சென்னை, 97907 72242

எம்பெருமானிடம் மந்திரங்களுக்கு அரசனான திருமந்திரத்தை உபதேசம் பெற்று எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரகத்தை சேவித்து, கணையாழியை கழற்றும்போது திருவடி சம்பந்தம் பெற்று, மயர்வற மதிநலம் அருளப்பெற்று, பூரணமாக அனுபவித்து, அனுபவம் உள்ளடங்காமல் "வாடினேன் வாடி" என்று தொடங்கி பெரிய திருமொழியை அருளுகிறார் திருமங்கை ஆழ்வார். அஷ்டாக்ஷரத்தின் பெருமையை *"நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்"* என்று தெரிவிக்கிறார். எம்பெருமானே உபாயம்–உபேயம் என்று காட்டிக் கொடுத்துள்ளார்.

ஆழ்வார் பெரிய திருமொழி பிரபந்தத்தில் வேங்கடமுடையானை குறித்து நாற்பது பாசுரங்கள் அருளியுள்ளார். திருவேங்கடத்தின் பெருமைகளை எல்லாம் பரக்கப்பேசி (எட்டாம் திருமொழி) திருவேங்கடம் அடை நெஞ்சமே என்று தன் மனத்திடம் கூறுகிறார்.

*"தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்*
*பெரியேனாயினபின் பிறர்க்கே யுழைத்து ஏழையானேன்*
*கரிசேர் பூம்பொழில் சூழ் கனமாமலை வேங்கடவா!*
*அரியே! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே"*

– பெரிய திருமொழி 1–9–7

இளமையில் அறிவில்லாமல் பல தீங்குகள் செய்துவிட்டேன். வயது சென்ற பிறகு மற்றவர்களுக்குப் பாடுபட்டு தரித்திரனானேன். பசுஞ் சோலைகள் நிறைந்து யானைகள் சேர்ந்திருக்கும் திருமலையில் உறையும் திருவேங்கடவா! உன் திருவடிகளை தஞ்சமென்று பற்றிக் கொண்டேன். அடியேனை ஆட்கொண்டு அருள்வாயாக!

*"திருமாலே என் நெஞ்சினுள் புகுந்தாய்*
*வந்தாய்; என் மனம் புகுந்தாய்மன்னிநின்றாய்!*
*நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே! திருவேங்கடம் மேய*
*எந்தாய்! இனி யான் உன்னை என்றும் விடேனே"*

– பெரிய திருமொழி 1–10–9

திருவேங்கடத்தில் உறையும் தலைவனே! அணையா விளக்கே! விரும்பியதைத் தரும் சிந்தாமணியே! என் நெஞ்சினுள் புகுந்தாய்!



மனத்துள் பொருந்தி இருந்தாய்! இனிமேல் உன்னை எப்போதும் மனதைவிட்டு வெளியே செல்ல விட மாட்டேன்.

*"பாவியாது செய்தாய் என் நெஞ்சமே!*
*பண்டு தொண்டு செய்தாரை மண்மிசை*
*மேவி ஆட்கொண்டு போய் விசும்பேறவைக்கும் எந்தை*
*கோவி நாயகன் கொண்டலுந்துயர் வேங்கட மலையாண்டு வானவர்*
*ஆவியாயிருப்பாற்கு அடிமைத்தொழில் பூண்டாயே"*

–பெரியதிருமொழி 2–1–4

பாங்கான என் உள்ளமே! சலனமுறாமல் திடமாய் இருந்து முன்னம் கைங்கர்யம் செய்தவர்களை பூலோகத்தில் அவதரித்து தொண்டு செய்ய வைத்து ஆட்கொண்டு, வைகுந்த வாசம் பண்ண வைக்கும் என் தலைவன், கோபியரின் நாயகன், மேகங்கள் ஒதுக்குமளவு உயர்ந்த திருவேங்கட மலையைத் தனக்கு உடமையாகக் கொண்டவன், தேவர்களின் உயிராக இருப்பவனுக்கு சேவகம் செய்ய முனைந்தாயே!

ஆழ்வார்கள் அருளிய உவமைகள் அனைத்தும் படிப்பவர் நெஞ்சில் கல்வெட்டுகளாக காலா காலத்திற்கும் நிலைத்துவிடும்.

திருவேங்கடவனை குறித்து ஆழ்வார்கள் அருளிய பாசுரம் ஒவ்வொன்றும் விலையில்லா மாணிக்கங்களாகத் திகழ்கின்றன.



## ஆழ்வார் திவ்வியப் பிரபந்த செயல்திட்டம்

*ஆழ்வார்கள் வாழி !* *அருளிச்செயல் வாழி !!*



* எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள் ஆழ்வார்கள்.
* ஆழ்வார்களில் பதின்மர் திருமலையப்பனைக் குறித்து மங்களாசாசனம் செய்துள்ளனர்.
* திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆழ்வார்களின் அருளிச்செயல்களான திவ்வியப் பிரபந்தங்களையும் அவர்களின் திருவுள்ளக் கிடக்கையையும் உலகிற்கு பரப்பவேண்டும் எனும் நோக்கில் 1990–ல் இச்செயல் திட்டத்தினை கொண்டுவந்தது.
* ஆழ்வார்கள், ஆசாரியர்களின் திருநட்சத்திர திருவிழாவினை நடத்துவதும், வைணவ திவ்வியதேச வைபவம் மற்றும் பரிவார தேவதைகளின் முக்கியத்துவத்தினை பறை சாற்றும் வகையில் சொற்பொழிவு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதும், திருப்பாவை உபந்யாசங்களை ஏற்பாடு செய்வதும் இத்திட்டத்தின் விதிமுறைகளில் ஒன்று.
* இவற்றோடுகூட ஆழ்வார்களின் வரலாற்றினை புத்தக வடிவில் இச்செயல்திட்டம் வெளியிட்டுள்ளது.
* 'நாலாயிரம்' பாசுரங்களை தெலுங்கு மொழியில் மொழி பெயர்க்கும் பணியும் நடைபெற்று வருகிறது.





திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



08-10-2021
வெள்ளிக்கிழமை
இரவு : ஹம்ச வாகனம்



09-10-2021
சனிக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்



09-10-2021 சனிக்கிழமை
இரவு : முத்துப்பந்தல் வாகனம்



10-10-2021 ஞாயிற்றுக்கிழமை
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்



திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



**10-10-2021**
ஞாயிற்றுக்கிழமை
இரவு:
சர்வபூபால வாகனம்

**11-10-2021**
திங்கட் கிழமை
பகல் : பல்லக்கில்
மோகினி அவதாரோத்ஸவம்





திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



**12-10-2021**
**செவ்வாய்க்கிழமை**
**பகல்:**
**அனுமத் வாகனம்**



**12-10-2021**
**செவ்வாய்க்கிழமை**
**இரவு:**
**யானை வாகனம்**



திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



## 13-10-2021

புதன் கிழமை

இரவு:

சந்திரப்பிரபை வாகனம்

## 13-10-2021

புதன் கிழமை

பகல்:

சூரியப்பிரபை வாகனம்









# திருமலையப்பன் பாக்சவாரி

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி, 9440120758

புராணத்தின்படி திருவேங்கடமுடையான் தனது பக்தரும், ஆசார்யர் இராமாநுஜரின் சீடரும் ஆன அனந்தாழ்வாரின் பக்தியை, கடமை உணர்வை அனைவரும் அறியும் வண்ணம் நிகழ்த்திய லீலை இது.

ஒரு நாள் ஆசார்யர் இராமாநுஜர் பகவத் காலட்சேபம் செய்து கொண்டிருக்கும் போது திருவாய்மொழியில் கீழ்க்கண்ட பாசுரத்தை சேவித்துக் கொண்டிருந்தார்.

*"எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்*
*முந்தை வானவர் வானவர் கோனொடும்*
*சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து*
*அந்தமில் புகழ்க்காரெழில் அண்ணலே"*

அப்போது ஆசாரியரின் கண்களில் நீர்வரக் கண்டபோது, சீடர்கள் காரணம் கேட்டனர். "திருமலையில் புஷ்ப கைங்கர்யம் செய்ய யாரும் இல்லாததால் பூக்கள் சிந்திக் கிடக்கின்றன என்று சொல்ல, அதுவாகில் புஷ்ப கைங்கர்யம் செய்ய நான் புறப்படுகிறேன் என்று கூறி தன் நிறைமாத கர்ப்பிணியான மனைவியுடன் காடுகள் சூழ்ந்த திருமலைக்கு கால்நடையாகவே வந்தவர் தான் அனந்தாழ்வான்.

கோடை காலத்திலும் பூச்செடிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும்படி தன் கைகளாலேயே ஒரு குளத்தை வெட்டி அதற்கு "இராமாநுஜர் ஏரி" எனப் பெயரிட்டு, சுற்றிலும் அழகான நந்தவனம் அமைத்து, அதில் மலரும் புஷ்பங்களைக் கொண்டு மாலை கட்டித் திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.








திருமலைக்கோயிலில் உண்டியல் 25-07-1821 ஆம் ஆண்டு முதன்முதலில் நிறுவப்பட்டது. 25-07-1825 முதல் அதை "சிரிகொலுவு" என்று அழைத்தனர். பித்தளை கங்காளம் வடிவம் கொண்ட ஓர் பாத்திரத்தை (கொப்பரை) வெள்ளை நிற துணியின் அடியில் ஒன்பது அடி நீளம் இருக்கும்படி இறக்குவர். 75 கிலோ எடையுள்ள இந்த கொப்பரை 2016-ல் முதன்முறையாக திரு.கே.சுரேஷ் அவர்களால் வழங்கப்பட்டது. இன்றைய இயந்திர காலத்தில் இணைய தளத்தின் வாயிலாக நாம் நினைத்த தருணத்திலே திருவேங்கடமுடையானுக்கு காணிக்கை செலுத்த தி.தி.தே. வழி வகை செய்துள்ளது. அதை பயன்படுத்தி நாம் இருக்கும் இடத்திலிருந்தே ஸ்வாமிக்கு காணிக்கையை செலுத்தி நம் பிரார்த்தனையை செய்யலாம்.











இந்த சமயத்தில் தான் நமது திருமலையானின் திருவிளையாடல் தொடங்கியது. திருமார்பு நாச்சியாரான ஸ்ரீதேவித் தாயாரோடு ஒரு இளம்தம்பதி போல உருக்கொண்டு இரவில் அந்த தோட்டத்தில் ஆனந்தமாக உலவினார்கள். அந்த புஷ்பங்களின் அழகினாலும், வாசனையிலும் கவரப்பட்ட பிராட்டி, அந்த புஷ்பங்களைப் பறிக்க, அவற்றை எம்பெருமான் தாயாருக்குச் சூட்டி மகிழ கோலாகலந்தான்.

அவர்கள் ஓடிப்பிடித்து விளையாடியதில் ஆங்காங்கே பூக்கள் சிதற, மறுநாள் காலை எம்பெருமானுக்கு மாலை சமர்ப் பிக்க புஷ்பங்களைப் பறிக்க வந்த அனந்தாழ்வான், தோட்டம் அலங்கோலமாக இருப்பது கண்டு திடுக்கிட்டார். பகவானின் பவித்ரமான நந்தவனத்தை இப்படி பாழ்படுத்துவது யார் என்று பார்க்க, மறுநாள் இரவு ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு பார்த்தார். வழக்கம்போல நள்ளிரவில் இளம் தம்பதிகள் வர, அந்த பெண் புஷ்பத்தைப் பறிக்க உடனே அனந்தாழ்வான் கையில் தடியோடு கோபமாக வெளியே வந்தார்.

அவரைக் கண்டதும் அந்த புருஷன் ஓடிவிட, பெண் மட்டும் இவரிடம் அகப்பட்டுக் கொண்டாள். அனந்தாழ்வான், அவளைப் பிடித்து ஒரு சம்பக மரத்தில் கொடிகளால் அவளைக் கட்டிப் போட்டு விட்டு அந்த ஆண் மகனைத் துரத்திக் கொண்டு சென்றார். ஆனால், எம்பெருமானோ அப்பிரதக்ஷிணமாக கோயிலின் மறுபக்கமாக ஓடி, உள்ளே புகுந்து மறைந்து விட்டார். மீண்டும் தோட்டத்துக்கு வர, அந்த பெண் என்னை விட்டு விடும் என்று கெஞ்ச, உன்னை பிடித்து வைத்துக் கொண் டால் தானே உன் புருஷன் உன்னைத் தேடிக் கொண்டு வரு வான் என்றார்.

அதன்படியே பெருமாளும் மறுபடியும் புருஷன் உருவில் வந்து, தன் மனைவியை விடும்படி கேட்க, தோட்டத்தைப் பாழ்படுத்தியதற்கு அபராதம் கட்டினால் இவளை விடுவேன். இந்த தோட்டம் எனது ஆசார்யரின் கட்டளைப்படி திருவேங்கடத்து எம்பெருமானின் புஷ்ப கைங்கர்யத்திற்காக உருவானது என்று கம்பீரமாகச் சொல்ல, புஷ்பப்பிரியனான திருவேங்கடநாதன் சங்கு சக்கர தாரியாய், திவ்ய பீதாம்பர தாரனாய், ஸ்ரீவத்ஸ கௌஸ்துப தாரண பிரசன்னமாக, பதறிப் போனார் அனந்தாழ்வான். "திருமார்பு நாச்சியார்" மட்டுமில்லை.

திரும்பிப் பார்த்தால் தான் மரத்தில் கட்டிப் போட்ட பெண்மணி "ஸ்ரீதேவித் தாயார்" என்பதை உணர்ந்து எம்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்தார் அனந்தாழ்வான். உமது ஆசார்ய பக்தியையும் பகவத் பக்தியையும் அனைவருக்கும் தெரியப்படுத்தவே நானும், தேவியும் சற்று

விளையாடினோம், நீரே சகல மரியாதைகளுடன் தேவியை சன்னதிக்கு கொண்டு வாரும் என்று உரைத்து மறைந்து விட்டார்.

தனது ஆசார்யர் தனக்களித்த பாக்யமாகக் கருதி, ஸ்ரீதேவிப் பிராட்டியை தன் மகளாக, ஒரு அழகான புஷ்பக் கூடையில் ஏளப்பண்ணி, ஆனந்த நிலையம் சென்று எம்பெருமானிடம் ஒப்படைத்தார் அனந்தாழ்வான். தாயாரும் எம்பெருமானின் திருமார்பில் சேர, கண்டவர்கள் அனைவரும் இவரின் பக்தியையும் எம்பெருமானின் எளிமையையும் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்கள். இதை நினைவு கூறும் வகையில் தான் இன்றளவும் பிரம்மோத்ஸவம் நிறைவு பெற்ற மறுநாள் வழக்கமாக கோயிலைச் சுற்றி பிரதக்ஷிணமாக வீதி புறப்பாடு காணாமல் அப்பிரதக்ஷிணமாக கோயிலைச் சுற்றிக் கொண்டு அனந்தாழ்வான் தோட்டத்துக்கு எழுந்தருளி அதன் பின்பு ஆனந்த நிலையத்தை அடைகிறார் எம்பெருமான்.



இனி இந்த உற்சவம் நடைபெறும் முறையைப் பார்ப்போம்.

அன்று மாலை ஐந்து மணியளவில் திருமலையப்பனின் உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமி சகல திவ்ய அலங்காரங்களுடன் உபய தேவிமார்களுடன் தங்க திருச்சியில் வீதி புறப்பாடு கண்டருளுவார். கோயிலை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றிக் கொண்டு தெற்கு மாடவீதியின் கோடியிலுள்ள அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருளுவார். அங்கே பெரிய ஜீயர் ஸ்வாமிகள். சின்ன ஜீயர் ஸ்வாமிகள் தலைமையில் பிரபந்த கோஷ்டி தமிழ் வேதமாம் நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களை சேவிப்பார்கள். பின்பு எம்பெருமானுக்கு நிவேதனம் ஆனதும், கற்பூர மங்கள ஆரத்திக்குப் பின்னர், அனந்தாழ்வானின் வம்சத்தாருக்கு கோயில் சார்பாக பரிவட்ட மரியாதை அளிக்கப்படும். இதில் தேவஸ்தான பிரதான நிர்வாக அதிகாரி, இணை நிர்வாக அதிகாரி உட்பட ஆலய நிர்வாகிகள் எல்லோரும் கலந்து கொண்டு கலியுகத் தெய்வமாம் திருவேங்கடமுடையானின் திருவருளைப் பெறுகிறார்கள்.

## திருமலையில் வைகுண்ட ஏகாதசி





**திருமலையில் வைகுண்ட ஏகாதசி என்றால் எண்ணிக்கையற்ற அளவில் பக்தர்கள் வருகிறார்கள். ஆண்டு முழுவதும் மூடியிருக்கும் வைகுண்ட துவாரம் எனும் பரமபத வாசல் இந்நாளில்தான் திறக்கப்படுகிறதல்லவா! வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெறுவதும், பகல் பத்து, இராப்பத்து நடைபெறுவதும், வைகுண்ட துவாதசியன்று சக்கரத்தீர்த்தம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. திருமலையில் இந்த முக்கியமான நாளில் ஒரு லட்சத்திற்கும் மேல் பக்தர்கள் கூடுவார்கள் எனப்படுகிறது. இங்கே இத்தமிழ் வேதமான நாலாயிர திவ்விய பிரபந்தம் வைகுண்ட ஏகாதசி சமயத்தில் மேலும் ஏற்றம் பெறுகிறது. இந்நாளில் திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருத்தேரில் பெண்டீர் மட்டும் வடம் பிடித்து வர திருமாட வீதிகளில் எழுந்தருளுகிறார்.**

# வேங்கடவற் கென்னை விதி

**முனைவர்**
**திருமதி. அருணா சங்கர வேலாயுதம்,**
**மதுரை, 99449 96616**

திருமலை ஒரு வராக க்ஷேத்திரம். ஆண்டாள் அவதாரத் திற்கு மூலமான அவதாரம் வராக அவதாரம். அதனால்தான் திருமலைவாசனை மங்களாசாசனம் செய்வதற்காகவே ஆண்டாள் அவதரித்தாள்.

*"பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும்*
*வேதம் அனைத்திற்கும் வித்தாகும் - கோதைத் தமிழ்"*

திருப்பாவை வேதம் அனைத்திற்கும் வித்து. வேதத்தின் ஏழு காண்டங்களே ஏழு மலைகளாக உள்ளன. திருமலையப்ப சுவாமியே வேதமுடிச்சு. அப்படிப்பட்ட வேங்கடமுடையானுக்கு கைங்கர்யம் செய்ய வேண்டுமென்பதே ஆண்டாள் நோக்கம். "பகவானையும் ஆண்டாள், நம்மையும் ஆண்டாள்" என்பதாய் ஆண்டாள் திருநாமத்திற்கு விளக்கம் தருகிறார் முக்கூர் ஸ்ரீலட்சுமி நரசிம்மாசாரியார்.

என்று வேங்கடவனுக்கு அந்தரங்கக் கைங்கர்யம் செய்ய அனுக்கிரகிக்க வேண்டும் என்று வேண்டுகிறாள்.

*"கொத்தலர் பூங்கணை*
*தொடுத்துக்கொண்டு*
*கோவிந்த னென்பதோ பேரெழுதி*
*வித்தகன் வேங்கடவாண னென்னும்*
*விளக்கினில் புகைவென்னை*
*விதிக்கிற்றியே"*

–நா.திரு.1–3

மலரும் பூக்களால் பாணம் செய்து, அதில் கோவிந்தன் நாமத்தை எழுதி





பகவான் ஒருவனே நாயகன், நாமெல்லாம் ஜீவாத்மாக்கள். நாயகி பாவத்தை அடைந்து அவனை சரணடைய வேண்டும். இதுவே வைணவத் தத்துவம். நாயகியாக தன்னை பாவித்துக் கொண்ட ஆழ்வார்களை விட, பெண்ணாகப் பிறந்த ஆண்டாள் வேங்கடவனை நாயகனாக எண்ணி, உறவாடி, பாடி மகிழ்ந்தது இயல்பானது. சாலச்சிறந்தது. திருமலையில் உறைகின்ற திருவேங்கடவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாக வும் பாடிய "நாச்சியார் திருமொழி" அகப்பொருள் இலக்கண மரபோடு அமைந்துள்ளது. நாச்சியார் திருமொழியில், முதலாம் திருமொழியின் முதல் பாடலிலேயே,

*"வெய்யதோர்தழலுமிழ் சக்கரக்கை*
*வேங்கட வற்கென்னை விதிக்கிற்றியே"* –நா. திரு.1–1.

நாச்சியார் திருமொழியில் பரந்தாமனை

*''புள்ளின் வாய் பிளந்தான்''*

– நா. திரு –1–2

*''வேங்கடத்துச் சாமத்தின் நிறம் கொண்ட தாடாளன்''* – நா. திரு –8–2

*''குளிரருவி வேங்கடத்து என் கோவிந்தன்''* – நா. திரு–8–3

*''மாவலியை நிலங் கொண்டான்''*

– நா. திரு –8–6

*''வேங்கடத்துச் செங்கண் மால்''*

– நா. திரு–8–7

*''ஆயர்பாடி அணி விளக்கை''*

– நா. திரு–13–10

என்று பல்வேறு பெயர்களில் பாடிய ஆண்டாள், திருப்பாவையில் நாராயணன், பரமன், உத்தமன், மாமாயன், ஊழி முதல்வன், மாதவன், வைகுந்தன், புள்ளரையன், புண்ணியன், முகில் வண்ணன், மனத்துக் கினியான், நெடுமால், திருமால் என நாமங்கள் பல நவின்று போற்றுகிறாள்.



திருமலையில் விளங்கும் வேங்கட வாணன் என்ற விளக்கிலே ஐக்கியமாகும்படி எனக்கருள வேண்டும் என்கிறாள்.

*''இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!*
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்''*

– திருப்பாவை 29

திருமலையில் சதா ஒலிக்கின்ற கோவிந்தா என்னும் திருநாமத்தை சிறு பெயர் என்று கூறி, திருப்பாவையில் *''குறையொன்றுமில்லாத கோவிந்தன்''* என்று திருவேங்கட வனையே போற்றுகிறாள்.





## கோயில் ஆழ்வார் திருமஞ்சனம்

**திருமலையில் வருடத்திற்கு நான்கு முறை கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் கோயிலை நன்றாக தூய்மைப்படுத்துவது முக்கிய நிகழ்வாக நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசி, யுகாதி (தெலுங்கு வருட பிறப்பு), ஆனிவர ஆஸ்தானம், பிரம்மோத்ஸவத்திற்கு முந்தைய செவ்வாய் கிழமையன்று நடைபெறும். அன்று ஆலயத்தில் அனைத்து இடங்களும், பொருட்களும் தூய்மைப் படுத்தப்பட்டு, நறுமணப்பொருட்களால் தயாரித்த கலவையை பூசுவது வழக்கம்.**

## ‘உங்களுக்காக நாங்கள்’

**உங்கள் ஆலோசனைகளுக்கு மற்றும் புகார் களுக்கு இலவசமாக தொடர்பு கொள்ளலாம்**

**டோல் ப்ரீ எண்.1800-425-4141, 1800-425-333333**

திவ்ய தேசமான திருப்பதியில் எம்பெருமானை சேவிக்க மலையேறிச் செல்ல வேண்டியதில்லை. ஆண்டாள் அருளிய பாசுரங்களே, படிகளாகி, நம்மை வேங்கடவனிடத்தில் சேர்க்கும் என்பார்கள்.

திருவரங்கத்து கருவறையில் வெண்ணெய் வாசம் வீசும். திருப்பதி ஏழுமலையான் மேனியிலும், அதரத்திலும் கற்பூர வாசம் வீசும். இதையே ஆண்டாள்

*“கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ”*

– நா. திரு –7–1

என்று பாடுகிறாள். எனவே முதலாம் வானமாமலை ஜீயர் சுவாமிகள்

*“மாயனின் செவ்வாயின் குணம் வினவும்*
*சீலத்தினாள்”*

என்று ஆண்டாளை குறிப்பிடுகிறார்.

மாமாயன், மாதவன், வைகுந்தன் எனத் திருப் பாவையில் நாமங்கள் பல கூறி கோதை கொண்டா டும் கோவிந்தன் திருவேங்கடவனே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*“சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை*
*பாடியருளவல்ல பல்வளையாய்! - நாடி நீ*
*வேங்கடவற் கென்னை விதி என்ற இம்மாற்றம்*
*நாங்கடவா வண்ணமே நல்கு”*

சூடிக்கொடுத்த அன்னையே நீ பாவை பாடி வேங்கடவனை உரித்தாக்கினாயே.திருவேங்கடத்து எம்பெருமானுக்கு என்னை வாழ்க்கைப்படுத்த வேண்டும் என்று நீ வேண்டியதை நாங்கள் மீறாதிருக்கும்படி அருள் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார் உய்யக்கொண்டார். கோதை காட் டியப் பாதையில் சென்று திருவேங்கடவன் திருவருள் பெறுவோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலை யான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத் துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க் கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதை கள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சி கள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டு மல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

# அத்திமர பெருமாளாக அருள்புரியும் ஸ்ரீசீனிவாசப் பெருமாள்

அறந்தாங்கி சங்கர்,
9444160161.

காவிரி வடகரையில் சீனிவாசப் பெருமாள் அருள் புரியும் வைணவத் தலம் மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள கோழிகுத்தி திருத்தலம் ஆகும். இந்த கோழிகுத்தித் திருத்தலம் சகல பாவங்களையும் போக்கும் திருத் தலமாக விளங்குகிறது. குடகுமலைப் பகுதியை நிர்மலன் என்ற மன்னன் அரசாட்சி செய்து வந்தான். அவன் முன் வினைப்பயன் காரணமாக தொழு நோயால் பாதிக்கப்பட்டான். இதற்கு குணமளிக்க பல்வேறு நாட்டின் மருத்து வர்களும் முயற்சி செய்தும் பலன் ஏற்படவில்லை. இதனால் மனம் வருந் திய மன்னன் மனம் போன போக்கில் பயணமானான்.

அப்போது வழியில் ஒரு முனிவரைக் கண்டான். அவரைக்கண்டு வணங்கிய நிர்மலன் தன் நிலையை எடுத்துக் கூறி தனக்கு வழிகாட்டுமாறு வேண்டினான். முனிவரும் அதற்கு மனமிறங்கி ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். இந்த மந்திரத்தை தொடர்ந்து ஜெபித்து வந்தால் வழி கிடைக்கும் என்றார். அதன்படி மன்னன் அதை நாள்தோறும் ஜெபித்தபோது ஒரு அசரீரி ஒலித்தது.

உனக்கு கடுமையான தோஷம் ஏற்பட்டுள்ளதால் இந்த நோய் உன்னை பற்றியுள்ளது. காவிரிக்கரை வழியே பயணம் செய்து வழியில் தென்படும் ஆலயத் திருக்குளங்களில் எல்லாம் நீராடி வா. எந்த தீர்த்தத்தில் உனக்கு நோய் தீர்ந்து சரியாகிறதோ அங்கேயே தங்கியிருந்து இறைவனை வழிபடு. இதனால் மனம் மகிழ்ந்த நிர்மலன் காவிரிக்கரையிலுள்ள பல்வேறு திருக்கோயில் களுக்குச் சென்று அங்குள்ள குளங்களில் நீராடினான். பின்னர் அடுத்த ஆலயத்தைத் தேடி பயணமானான். ஆனாலும் மன்னனின் நோய் குணம் பெறவில்லை.

மனம் சோர்ந்து மூவலூர் திருத்தலம் வந்து சேர்ந்தான். அங்கே மார்க்கசகாயேசுவரரை வணங்கி வேண்டி நின்றபோது, மீண்டும் அசரிரீ ஒலித்தது. உன்னுடைய தோஷம் நீங்கி நீ பூரணமாக குணமடையும் காலம் கனிந்துள்ளது. வடக்கே சற்றுத் தொலைவில் ஒரு குளம் தென்படும் அதில் நீராடு. அதுவே உனக்கு விடுதலையைத் தரும் என்றது. அதனால் மனம் மகிழ்ந்த நிர்மலன் ஆலயமாகத் திருக்குளத்தினை தேடியபோது இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அழகிய திருக்குளம் தென்பட்டது. அதில் ஆனந்தமாக நீராடி எழுந்தபோது நோய் தீர்ந்து உடல் பொன் நிறமாகக் காட்சி அளித்தது.

இதனால் மனம் மகிழ்ந்த நிர்மலன் சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் நன்றி கூறி அங்கிருந்தவாறே வழிபாட்டை மேற்கொண்டான். அப்போது அவன் முன்பாக ஒரு அத்திமரம்





# தினசரி சேவைகள்







திருவேங்கடமுடையான் திருச்சன்னதியில் நாள்தோறும் பல்வேறு சேவைகள் நடைபெறுகின்றது. அவை சுப்ரபாதம், தோமாலை, கொலுவு, அர்ச்சனை, திருக்கல்யாணம், டோலோத்ஸவம், ஆர்ஜித பிரம்மோத்ஸவம், வஸந்தோத்ஸவம், ஸஹஸ்ர தீபாலங்கார சேவை, ஏகாந்த சேவை என "தினசரி சேவை"கள் நடைபெறுகிறது.











ஒன்று தோன்றியது. அதில் பிரம்மாண்ட வடிவில் சீனிவாசப்பெருமாள் சங்கு சக்கரத்துடன் காட்சி தந்து அருள் வழங்கினார். நிர்மலன் இத்தலத்திலேயே தங்கி வழிபட்டு ரிஷியாக மாறினான். பிற்காலத்தில் பிப்பல மகரிஷி என்றழைக்கப்பட்டார். இவர் நீராடி நோய் நீங்கப் பெற்ற தீர்த்தம் பிப்பல தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

**அத்திமரப் பெருமாள் தலவரலாறு:**

பிப்பல மகரிஷியின் சிறப்பைக் கேள்விப்பட்ட தஞ்சையை ஆண்டு வந்த சரபோஜி மன்னர் இத்தலம் வந்து முனிவரையும் பெருமாளையும் தரிசித்ததுடன், தனக்கு போர் மூலம் ஏற்பட்ட தோஷத்தைப் போக்கியருள வேண்டும் என்று வேண்டினார். அதுசமயம் முனிவருக்கு காட்சியளித்த பெருமாள் மீண்டும் தோன்றி மன்னனுக்கும் காட்சியளித்து அருளாசி வழங்கினார். மனம் மகிழ்ந்த மன்னன் தான் கண்ட காட்சியை சிலையாக வடிக்க விரும்பி, பதினான்கு அடி உயர அத்திமரத்தில் அழகிய பெருமாளின் திருவுருவை அமைத்து புதிய ஆலயமும் எழுப்பினான்.

14 அடி உயர அத்தி மரத்தில் பிரம்மாண்ட வடிவில் நின்ற கோலத்தில் வானை முட்டி நிற்கும் தோற்றத்தில் காட்சி தருவதால் இவருக்கு வான முட்டி பெருமாள் என்ற திருப்பெயரும்





# திருமலை பஞ்சபாண்டவ தீர்த்தம் (கோகர்ப்ப தீர்த்தம்)

திருமலை க்ஷேத்திரபாலகர் சிலை அருகில் பஞ்சபாண்டவ தீர்த்தம் அமைந்துள்ளது. இது கோகர்ப்ப தீர்த்தத்தின் ஒரு பாகமே. இங்கு பாண்டவ குகையும் உள்ளது. இந்த குகையில் குந்தி தேவி, திரௌபதி தாயார் மற்றும் பஞ்ச பாண்டவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணர் உபதேசம் அளிக்கும் விதமாக ஒரு சிலை அமைந்துள்ளது. அதன் அருகில் திருவேங்கடமுடையான் சிலையும், அவரது திருப்பாதங்களும் மற்றும் அனுமன் சிலையும் அமைந்துள்ளது. துவாபர யுகத்தில் பாண்டவர்கள் கௌரவர்களை அழித்த பாபங்களில் இருந்து விடுபட, ஸ்ரீகிருஷ்ணர் இந்த க்ஷேத்திரத்திற்கு அனுப்பினார். பாண்டவர்கள் வைகாச சுத்த துவாதசி அன்று சேஷாத்ரிக்கு வந்தனர். இந்த நீரோடைக்கு அருகில் ஆசிரமம் அமைத்த காரணத்தால் இந்த குகை பாண்டவ குகை என்றும், இத்தீர்த்தம் பஞ்சபாண்டவ தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.



வழங்கப்படுகிறது. இவர் மூலிகை வண்ணங்களால் மெருகேற்றப்பட்டுள்ளார். அத்திமரத்தின் வேரே பெருமாளின் திருவடியாக அமைந்து நிற்பது அதிசய நிகழ்வாகும். இவருக்குப் பக்தப்பிரியன், வரதராஜன் என்ற திருநாமங்களும் வழங்கப்படுகின்றன.

(காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் ஆலயத்தின் திருக்குளத்தில் எளிய வடிவில் அத்திவரதர் இருப்பது நினைவு கூரத்தக்கது).

**ஆலய அமைப்பு:**

கிழக்கு நோக்கிய எளிய ராஜ கோபுரத்தினை கொண்டு சிறிய ஆலயமாக அமைந்துள்ளது. ஆலய விமானம் குடை போன்ற அமைப்பு உடைய சந்திர விமானம் ஆகும்.

உள் மண்டபத்தில் மூலவருக்கு வலதுபுறம் சக்கரத்தாழ்வாரும், இடது புறம் யோக நரசிம்மரும் கிழக்கு நோக்கி காட்சித்தர, தெற்கு முகமாய் நர்த்தன கிருஷ்ணன் காட்சி தருகிறார்.

வெளிப் பிரகாரத்தில் வினாயகர், விஷ்வக்சேனர், இராமாநுஜர், பிப்பல மகரிஷி காட்சி தருகின்றனர். பிப்பல மகரிஷி அருளிய சனி காயத்ரி மந்திரம், சீனிவாசப் பெருமாளின் தியான சுலோகம் ஆகியவை ஆலய வழிபாட்டின்போது ஓதப்படுகிறது.



# திருமலை க்ஷேத்திர பாலகர் (ருத்ரர்)

திருமலை க்ஷேத்திரத்தின் க்ஷேத்திர பாலகர் ருத்ரர் அதாவது சிவன்.

இந்த க்ஷேத்திர பாலகர் சிலை கோகர்ப்ப தீர்த்தத்தில் பூர்ண வடிவிலும், திருக்கோயிலுள் அம்ச வடிவிலும் அமைந்து உள்ளது.

சிவராத்திரி அன்று கோகர்ப்ப தீர்த்தம் அருகில் இருக்கும் க்ஷேத்திர பாலகருக்கு விசேஷமான நாளாகும். அன்று தி.தி.தே. உயர் அதிகாரிகள், அர்ச்சகக் குழுவினர் மேளதாளத்துடன் சென்று சிறப்பு அபிஷேகங்கள், பூஜைகள் நிர்வகிப்பார்கள். அன்று பிரசாதங்களை சமர்ப்பித்து அங்கு வரும் பக்தர்களுக்கு அளிப்பதும், கூட்டம் கூட்டமாக பக்தர்கள் அன்று க்ஷேத்திர பாலகரை வணங்குவதும் சிறப்பான ஒன்றாகும்.






திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறுகின்ற பிரம்மோத்ஸவம் "கருடக்கொடி" ஏற்றத்துடனே துவங்கி, கருடக்கொடி இறக்கத்துடன் இனிதே நிறைவடைகிறது. இதன் நடுவில் பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாளன்று இரவு திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் சேவையே "கருட சேவை" என்கிற கருடோத்ஸவம். கருட சேவையில் திருமலையப்ப ஸ்வாமியை மூலமூர்த்திக்கு அணிவிக்கும் சிறப்பு ஆபரணங்களான "மகர கண்டி", "லக்ஷ்மி ஹாரம்" மற்றும் "சஹஸ்ர நாம மாலை" போன்றவற்றால் அலங்கரிப்பர். சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் என்கிற கோதா தேவி அவதரித்த ஊரான ஸ்ரீவில்லிப் புத்தூரில் இருந்து கொண்டு வரப்படும் அழகிய பூமாலையையும் திருமலையப்ப ஸ்வாமிக்கு அணிவித்து அலங்கரிப்பர்.



**சப்தஸ்வர அனுமன்:**

இக்கோயிலில் அமைந்து இருக்கும் அனுமன் சிலையைத் தட்டினால் ஏழு ஸ்வரங்கள் ஒலிப்பதாக கூறப்படுகிறது.

இதனால் இவர் சப்த ஸ்வர அனுமன் என்றழைக்கப்படுகிறார். வாலை சுருட்டி தலையில் வைத்துள்ள கோலத்தில் காட்சி அளிக்கிறார். இவர் இசை நாட்டியத்திற்கும் ஆசி வழங்குபவர் என்பது கூடுதல் சிறப்பாகும். தல விருட்சம் அத்திமரம். சனி தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கண்கண்ட தலமாக இக்கோயில் விளங்குகிறது.

கலைத்துறையினருக்கு புகழும், வளமும் சேர்க்கும் ஆலயமாகவும் போற்றப்படுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில், மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில், மயிலாடுதுறை ரயில் நிலைய சந்திப்பை ஒட்டி மூவலூர் அமைந்துள்ளது.

அங்கிருந்து சோழம்பேட்டை செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டர் சென்றால் கோழிகுத்தியை அடையலாம். ஆன்மீக பெருமக்கள் ஒருமுறை கோழிகுத்தி திருத்தலம் சென்று ஸ்ரீசீனிவாசப் பெருமாளை தரிசனம் செய்து தங்களது முற்பிறவி தோஷங் களையும் பாவங்களையும் நீங்கப் பெறலாம்.




திருமலையில் பிரம்மோத்ஸத்தின்போது சென்னையிலிருந்து "திருப்பதி குடை" என்ற பெயரில் ஒன்பது குடைகள் மற்றும் மங்களப்பொருட்களை பக்தர்கள் பாதயாத்திரையாக, திருமலையப்ப ஸ்வாமிக்கு சமர்ப்பிப்பர். ஆந்திர மாநில அரசு சார்பில் திருமலையப்ப ஸ்வாமிக்கு சிறப்பு வாய்ந்த பட்டுவஸ்திரங்களையும் சமர்ப்பிப்பது வழக்கம். இவ்வாறாக பிரம்மோத்ஸவ ஐந்தாம் நாள் இரவு "கருட சேவை"யில் திருமலையப்ப ஸ்வாமியின் திருப்பாதங்கள் கருடனின் திருக்கரங்களில் பதியுமாறு வைத்து, புதிய குடைகளுடனும் திருமலை திருமாடவீதிகளில் எழுந்தருளுவார்.



# கருமை மலையினில் கருணை மழை முகில்

உ.வே. டாக்டர்
அனந்த பத்மநாபாசாரியார் ஸ்வாமி,
சென்னை, 99620 11293.



இராமாநுஜருக்குப் பின்னர் வைணவக் கோட்பாடுகளை பரவச் செய்த பெருமைக்குரியவர் சுவாமி வேதாந்த தேசிகனாவார். இவர் காஞ்சி வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள தூப்புல் என்னும் சிறிய அக்ரஹாரத்தில் பதிமூன்றாம் நூற்றாண்டில் மலையப்ப சுவாமியின் பிரம்மோத்சவ தீர்த்தவாரி திருநன்னாளான புரட்டாசி ச்ரவணத்தன்று பிறந்தார்.

திருவேங்கடமுடையான் மற்றும் அவரின் கருணையின் வடிவான தயா தேவியைப் பற்றிய 18 சுலோகங்கள் கொண்ட தயா சதகம் என்னும் ஒரு ஸ்தோத்திரத்தை சுவாமி தேசிகன் பாடியுள்ளார். எம்பெருமானின் அனுகம்பா அதாவது தயா தேவியின் கருணையை விளக்கும் இந்த ஸ்தோத்திரம் பத்து பிரிவுகளாக, பத்து வகையான விருத்தங்களில் சுவாமி தேசிகனால் பாடப்பட்டு உள்ளது.

தயா சதகத்தில் மலையையே திரு உடம்பாகக் கொண்டுள்ள திருமலையப்பனை நம்மாழ்வார் காட்டிய வழியில் சுவாமி தேசிகன் வணங்குகிறார். வேதத்தின் ஸாரத்தை தமிழில் பாசுரங்களாகப் பாடி நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் பத்து பத்துகளின் பொருள்களையே தயாசதகம் எடுத்துரைக்கின்றது என்று நம் முன்னோர்கள் கொண்டாடுகின்றார்கள். ஒவ்வொரு பத்து பாசுரங்களிலும் திருவேங்கடமுடையானின் கருணையின் பெருமையினை சுவாமி தேசிகன் பாடியுள்ளார். அவையாவன 1. எம்பெருமானே மோக்ஷம் அளிப்பவன். 2. அவன் அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் செய்யும் சக்தி படைத்தவன். 3. அடியார்களுக்கு விரோதிகளை ஒழிப்பவன். 4. எல்லாவற்றிற்கும் உபாயமாக இருப்பவன். 5. அடையப்படும் பலனாய் இருப்பவன். 6. சிறந்த உபாயமாகிய சரணாகதி என்னும் பிரபத்தியாலேயே அடையப்படுபவன். 7. தாழ்ந்தவர்களுடன் கலந்து பரிமாறும் தன்மையன். 8. மிக மேம்பட்டவனாய் வேங்கடமுடையானாக நிற்பவன். 9. ராமர் கிருஷ்ணர் போன்ற அவதாரங்களை செய்பவன். 10. தன்னை சரணடைந்தவர்களுக்கு பூவுலகத்திலேயே மோக்ஷ ஆனந்தத்தை அருள்பவன்.

தயா சதகத்திலிருந்து அலர்மேல்மங்கையான தயாதேவியை போற்றும் சில சுலோகங்களை இந்த புரட்டாசி மாதத்தில் நாம் பாராயணம் செய்து மங்கலங்கள் பெறலாம்.

அலர்மேல் மங்கை தாயாரே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என வடிவமெடுத்து ஸ்ரீநிவாஸனை மகிழ்விக்கிறாள். இரக்கத்

தின் உருவமாகவும், தாய்மைக்கான ஒரே எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்து நம்மைப் போன்ற ஜீவன் மீது கருணையை பொழிகிறாள். இப்படிப் பட்ட தயாதேவியை நாம் துதித்து இவ்வுலக ஐச்வர்யங்களையும், மோக்ஷம் என்னும் அவ்வுலக பேரின்பத்தையும் பெறலாம்.

**மஹாலட்சுமியான தயாதேவி:**

*ஸமஸ்த ஜநநீம் வந்தே சைதந்ய ஸ்தன்ய தாயிநீம் |*

*ச்ரேயசீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணாம் இவ ரூபிணீம் || (6)*

உலகில் தாயானவள் தன் குழந்தைகளுக்கு தன் முலைப்பால் கொடுத்து வளர்க்கிறாள். பெரிய பிராட்டியான மஹாலக்ஷ்மியோ ஞானமாகிய பாலை குழந்தைகளான நம் போன்றோருக்கு அளித்து நல்வழி பெறச் செய்கிறாள். இதனால் உலகிற்கே தாயாக விளங்குகிறாள். கருணையே வடிவாகக் கொண்டவளாகவும், அகில லோகங்க ளுக்கும் அறிவுப்பால் ஊட்டும் அன்னையாகவும், நலன்களுக்கெல்லாம் நிதியான ஸ்ரீநிவாசனுக்கும் நலம்தரும் நங்கையாகவும் உள்ள மஹாலக்ஷ்மி யான தயா தேவியை நமஸ்கரிக் கிறேன் என்று சுவாமி தேசிகன் பாடியுள்ளார். மஹாலக்ஷ்மியை போற்றும் இந்த சுலோகத்தை பாராயணம் செய்வதால் செல்வம் பெருகும்.

**பூமி பிராட்டியான தயாதேவி:**

*வந்தே வ்ருஷகிரி ஈசஸ்ய மஹிஷீம் விச்வ தாரிணீம் |*

*தத் க்ருபா ப்ரதிகாதா நாம் க்ஷமயா வாரணம் யயா|| (7)*

எம்பெருமானின் தேவியான பூமி தேவியே (விச்வதாரிணீ) உலகத்திலுள்ள அனைவரையும் தாங்குகிறாள். மலைகள் பூமியை தாங்குகின்றன. மலைமீதுள்ள மலையப்ப சுவாமி,மலைகளினால் தாங்கப்படும் பூமி பிராட்டியுடன் திருமலையில் நித்யவாஸம் செய்கிறான். பொறுமையின் வடிவாக திகழ்வதால் அவளை க்ஷமா என்றும் துதிக்கிறோம். ஜீவன்கள் பாபங்களை செய்து எம்பெருமானின் கருணையைப் பெற இயலாமல் தவிக்கின்றனர். அந்த ஜீவன்களின் தடைகளை எல்லாம் நீக்குபவ ளான பூமிப்பிராட்டியை நமஸ்கரிக்கிறேன் என்று சுவாமி தேசிகன் பாடியுள்ளார்.

**நீளா தேவியான தயா தேவி:**

*நிசாமயது மாம் நீளா யத் போக படலைர் த்ருவம் |*

*பாவிதம் ஸ்ரீநிவாஸஸ்ய பக்த தோஷேஷ்வதர்சநம் || (8)*

நப்பின்னை பிராட்டி என்னும் நீளாதேவி தனது கருமையான கயல் விழிகளின் அசைவுகளினால் கண்ணனாம் கலியுக தெய்வத்தை மயக்குகிறாள். இவள் கண் அசைவில் கட்டுப்பட்டதினாலே நம் குற்றங்களை கவனிக்காமல் கண்ணன் கருணை யுடன் நமக்கு அருள் புரிகிறான். எம்பெருமானி டமிருந்து சாதுர்யமாக பக்தர்களைக் காத்தளித்த அன்னையாம் நீளாதேவி எம்மை அனுகிரகிக் கட்டும் என்று சுவாமி தேசிகன் பாடியுள்ளார்.

நீளாதேவியைப் போற்றும் இந்த சுலோகத்தை பாராயணம் செய்வதினால் நம்முடைய பூர்வ





## திருமலை புஷ்பயாகம்

**திருவேங்கட முடையான் பிரம்மோற்சவம் முடிந்து புஷ்ப யாகம் செய்யப்படுகிறுது. அதில் புஷ்பங்களாலேயே புஷ்பங்களே யாகமாக கூடை கூடையாக எல்லாவித மலர்களும் ஐந்து டன்களுக்கும் மேலே திருவேங்கடமுடையானுக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.**



ஜென்ம பாபங்களுடன் வியாதி முதலானவற்றை தரும் சாபங்களும் நீங்கும்.



**தயாதேவியினிடத்தில் பிரார்த்தனை:**

குழந்தையானது தாயிடமே தனக்கு வேண்டியதை கேட்பது போல இங்கு லோக மாதவனான தயா தேவியிடம் தேசிகன் தன் விருப்பத்தை விண்ணப்பித்தார்.

*நாத: பரம் கிமபி மே த்வயி நாதநீயம்*
*மாதர் தயே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம் |*
*பத்தாதரோ வ்ருஷகிரி ப்ரணயீ யதாSஸௌ*
*முக்த அநு பூதிம் இஹ தாஸ்யதி மே முகுந்த: ||*

*– 100*

என்னுடைய வேண்டுதல்களை எல்லாம் நிறைவேற்றிய தயாதேவியே! இனி உன்னிடம் வேண்டுவதற்கு எதுவுமில்லை. திருமலையப்பன் மிகுந்த ஆனந்தத்துடன் என்னை அநுகிரஹம் செய்ததினால், பரமபதத்தில் நித்யர்களுக்குத் தரும் அந்த ஆனந்தத்தை இங்கேயே எனக்கு அருளுகிறான் என்று சுவாமி தேசிகன் பாடியுள்ளார்.

மூன்று பிராட்டியுடன் கூடிய ஸ்ரீநிவாஸனுடைய கருணை நமக்கு இங்கேயே ஆனந்த வாழ்க்கையை தருகிறது என்று சுவாமி தேசிகன் அருளியுள்ளார். வாழ்க்கையில் கஷ்டம் நீங்கி இன்பம் பெருகிட வழி வகுக்கும் இந்த சுலோகத்தை பாராயணம் செய்வோமாக.

மலையப்பனின் திவ்ய பிரம்மோத்சவம் நடைபெறும் இந்த புரட்டாசி மாதத்தில் மலையப்பனின் அருள் பெற்றவராக, அவருடைய சக்கர ஸ்நாந தினத்தன்று அவதரித்த வேதாந்த தேசிகன் இயற்றிய இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்து நாமும் கலியுக தெய்வத்தின் மழையில் குளிர்ந்திடலாம்.




## எஸ்.வி. அரும்பொருட்காட்சியகம், திருமலை

**திருமலை யாத்திரை என்றாலே திருமலையான் தரிசனமே. திருமலையை தரிசிக்கும் பக்தர்கள் திருமலை யாத்திரைக்குப் பின்னர் திருப்பதியில் பிற ஆலயங்களை தரிசித்து மியூசியம் பார்ப்பதற்கு நேரம் இல்லாமல் திரும்பி விடுகின்றனர். திருமலை யாத்திரையை பயன் உள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமெனில் ஸ்வாமி தரிசனத்திற்கு முன்போ, பின்போ ஒரு மணி நேர காலம் ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான ஞான மந்திர (எஸ்.வி.மியூசியம்) த்தில் கழித்தால் ஞானம் வளரும். கடந்த 1500 ஆண்டுகளில் ஆலயத்திற்கு வந்து சேர்ந்த எத்தனையோ வரலாற்று சிறப்பு மிக்க பொருட்கள் எஸ்.வி.மியூசியத்தில் யாத்திரிகர்களின் பார்வைக்காக காட்சியாக்கப்பட்டுள்ளன. அந்த பொருட்களின் சிறப்புக்களை தெரிந்து கொள்வதினாலும் யாத்திரிகர்கள் மிக்க ஆனந்தம் கொள்ள இயலும். எஸ்.வி. மியூஜியத்தில் உள்ள மற்றொரு சிறப்பு மிக்க வரலாறு வராஹ ஸ்வாமி தாமிர சாசனம். திருமலையில் உள்ள வராஹ ஸ்வாமி ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த செப்பேடுகள் புராதனமானது. இவற்றோடு கூட ஒரு மாதிரி கிரீடத்தினையும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கிரீடம் ஸ்வர்ண கிரீடம். இதைப் போன்ற பல்வேறு பொருட்களை இங்கு பார்வையிடுவதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.**

# திருவேங்கடக் காட்சிகள்

திரு. நா. சிவராமன்,
சென்னை,
98848 32854.

"தெள்ளியார் வணங்கும் மலைத் திருவேங்கடம்; செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம்; தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ் திருவேங்கடம்; திண்திறல் அரியாயவன் திருவேங்கடம்" ; என்று பலவாறாக போற்றப்படுவதே உலகுக்கு எல்லாம் எளிமையாகத் திகழும் மலையான திருவேங்கடமாகும்.

அந்த மலைக்குச் சென்று "நாயேன் வந்து அடைந்தேன் ; நல்கி ஆள் என்னைக் கொண்டருளே" என்று வேண்டியவர்க்கு வேண்டியதை வழங்குபவன் வேங்கடத்தான் ஆவான்.

"கண் ஆய்", ஏழ் உலகுக்கு உயிர் ஆய எம் கார் வண்ணனை, விண்ணோர் தாம் பரவும் பொழில் வேங்கட வேதியனை", "சீர் ஆர் திருவேங்கட மாமலை மேய ஆரா அமுதனை" – என்று வேங்கடவனை எப்பொழுதடா காண்போம் என்ற ஆசையே பக்தர்களிடம் இருக்கும்.

சாமானிய மக்களான நமக்கே இப்படி இருந்தால் ஆழ்வார்கள் நிலை என்ன? அவர்கள் திருமலையானை காணச் செல்லும் போது வழியில் தென்படும் எல்லா இயற்கைக் காட்சிகளையும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் வர்ணித்துள்ள பாங்கை என்ன என்று சொல்வது?

எல்லா மனிதர்களும் தங்கள் வாழ்வில் ஒரு முறையாவது திருப்பதி பெருமானை தரிசித்து விட வேண்டும் என்று எண்ணும் பொழுது, அந்த மலையிலேயே பிறந்து வாழ்பவர்கள் எவ்வளவு புண்ணியம் செய்தவர்கள்.

அங்கு வாழும் குறவர்களின் வாழ்க்கைத் தான் திவ்ய பிரபந்தத்தில் அதிகமாக விவரிக்கப் படுகின்றது என்பதே உண்மை.

திருமலையிலுள்ள குறவர்கள் காட்டுப் பன்றி உழுத நிலத்திலேயே திணைகளை விதைக்கின் றார்கள், என்கின்றார் பேயாழ்வார்.

"முடிந்த பொழுதில் குறவாணர் ஏனம்
படிந்து உழுசால் பைந்திணைகள் வித்த..."

– பாடல் – *2370*

பொய்கையாழ்வார் சொல்வது :

திருமலையில் வாழும் குறவர்கள் தங்கள் புனத்தில் புகுந்து விட்ட யானைகளை விரட்ட கவண் கல்லா எறிகின்றார்கள்? இல்லை... திருமலை தெய்வம் மாதிரி அங்கு வாழும் மக்களும் செல்வச்செழிப்புடன் உள்ளார்களாம். அதனால் கவண் கற்களுக்குப் பதிலாக மாணிக்கக் கற்களை அவற்றின் மீது எறிகின்றார்களாம்.





**திருமலையப்பனுக்கு ஒவ்வொரு வியாழக்கிழமையில் அதிகாலை முதல் ஏகாந்த சேவை வரை எல்லா சேவைகளும் முடிந்த பின்னர், கோயில் நடைசாற்றும் முன்னர் தங்க, வைர, ரத்ன, பீதாம்பர ஆபரணங்களை அகற்றி பத்திரப்படுத்துவர். இதுபோது பெருமாளின் பாதி ஊர்த்தவ புண்ட்ர பச்சை கஸ்தூரி கற்பூரம் குறைக்கப்படும். இதைத்தான் "நேத்ர தரிசனம்" என்று அழைப்பர். அன்று 24 கஜ அடி பட்டு வேஷ்டியும், 12 கஜ மேல் சாத்தும் அணிவிக்கப்படுவதை பக்தர்கள் கண்டு பரவசமடைவர். அப்போது எம்பெருமானின் திருப்பாதம், திருக்கை கவசங்கள், சங்கு, சக்கரம், காதணிகள் மற்றும் தங்க சாலிகிராம மாலை மட்டும் அணிவிப்பார்கள். இவ்வாறு பிரதி வியாழக்கிழமையும் தெய்வீக ஒளியுடன் தன் இதயக்கமலத்தில் ஸ்ரீதேவி, பூதேவியருடன் "நேத்ர தரிசனமாக" நமக்கு தரிசனம் அளிக்கின்றார்.**

இதனை ஊர்ந்து செல்லும் பாம்புகள் பார்த்து விட்டு, அவற்றின் ஒளியை மின்னல்கள் என்றெண்ணி, மழை வரப் போகின்றது போலிருக்கே என்று பயந்து புற்றுக்களில் போய் புகுந்து கொள்கின்றனவாம். எவ்வளவு அழகு பாருங்கள்.

*''ஊரும் வரி அரவம் ஒண் குறவர் மால்யானை*
*பேர எறிந்தபெரு மணியை கார் உடைய*
*மின் என்று புற்று அடையும் வேங்கடமே''*

(பாடல் : 2119)

மேலும், வேடர்கள் முற்றிய அகிற் கட்டைகளை நெருப்பில் இடுகின்றனர். அதில் எழும் புகையானது வேங்கட மலை மீது பரவுகின்றது என்கின்றார் திருமங்கையாழ்வார்.

*''கானவர் இடு கார் அகில் புகை ஓங்கு*
*வேங்கடம்...''*

(பாடல்:1048)

திருமழிசை ஆழ்வார்

*''எப்பாடும் வேடு வளைக்கக் குறவர் வில்*
*எடுக்கும் வேங்கடமே''*

(பாடல்: 2427) – என்கின்றார். என்ன பொருள் இதற்கு?

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை'' என்று எண்ணி, பொருளை தேடுபவர்கள், சலித்துப் போய், "அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை'' என்று உணர்கின்றார்கள். கடைசியில் எங்கு அருள் தேடி வருகின்றார்களாம்?

திருமலைக்குத்தான் வருகின்றார்களாம்.

*''அலைந்தேன், வந்தடைந்தேன், அடியேனை*
*ஆட்கொண்டருளே...''*

என்று வருகின்றார்களாம். "உடல் நோய்களையும், கர்ம வினைகளையும் நீக்கி அருளுபவன் திருமலை தேவன்'' – என்கின்றார் திருமழிசை ஆழ்வார். மேலும் ,"திருமலையானது தனது நீர்மைத் தன்மையால் நம் பாவங்களைப் போக்குகின்றது எனவும், இந்த உலக வாழ்விற்குப் பின் பரமபதம் செல்ல விரும்புபவர்கள் திருவேங்கடவனை மலர்களிட்டு பூஜை செய்து வணங்க வேண்டும்'' (பாடல்: 2423,2471)என்று சொல்கின்றார்.

பூதத்தாழ்வார் "சந்தனத்தையும், ஆபரணங்களையும், பட்டாடைகளையும், மணம் கூடிய மல்லிகை மாலைகளையும் எடுத்துக் கொண்டு திருவேங்கடவனின் திருவடிகளில் வழிபட்டுத் துதித்துப் பணிவது அடியார்களுக்கு ஏற்ற ஒன்றாகும்..." என்கின்றார். (பாடல்:2257)

இனி பக்தி வாழ்க்கை திருமலையில் எப்படி உள்ளது என்று பார்க்கலாம்.

திருவேங்கடத்தில் துவாதசி அன்று வான் போன்ற ஒளிக் கண்களுடைய பெண்கள் பூ மாலையுடன் தூபத்தை ஏந்திச் செல்கின்றார்கள். அந்த தூபப் புகையானது வானை மறைத்து, விண்மீன்களை ஒளி மங்கச் செய்கின்றதாம் என்கின்றார் பொய்கை ஆழ்வார் (பாடல்: 2163).

அது போல, கேள்வி ஞானம் உடைய வேதியர் பல்வேறு திசைகளில் தினமும் தூபம், தீபம், மலர், நீர் – ஆகியவற்றை கைகளில் ஏந்தியபடி திருமலைக்குச் சென்று வணங்குவார்களாம்.

**"வகையறு நுண் கேள்வி வாய்வார்கள் நாளும்**
**புகை விளக்கும் பூம் புனலும் ஏந்தி திசை திசையின்**
**வேதியர்கள் சென்று இறைஞ்சும் வேங்கடமே"**

– பாடல்:2118

மாலை வேளைகளில் திருவேங்கடவனுக்குத் திருவந்திக் காப்பு இட, சந்திரனை சடை முடியில் வைத்த சிவபெருமானும்; தாமரையில் பிறந்த பிரம்மனும்; திருமுத்துக்குடை முதலிய வழிபாட்டுப் பொருட்களுடன் செல்கின்றார்களாம் – என்கின்றார் திருமழிசை ஆழ்வார் (பாடல்: 2424),

மேலும், நித்திய சூரிகள், வேங்கடமலை பெருமானின் திருவடி தாமரைகளில், பக்தியுடன் பூக்களைப் பரிமாறி துதித்து, வீழ்ந்த மரம் போல விழுந்து வணங்குகின்றார்களாம் – என்கின்றார் (பாடல்: 2426).

அடுத்து பூதத்தாழ்வார் வருகின்றார் :

**"நெறியார் குழல் கற்றை முன் நின்று பின் தாழ்ந்து**
**அறியாது இளங்கிரி என்றெண்ணி பிறியாது**
**பூங்கொடிக்கள் வைகும் பொரு புனற் குன்று என்னும்**
**வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு".**

– (பாடல்: 2234)

திருமலையில் வேங்கடவனை எண்ணி தியானத்தில் உள்ளார் ஒருவர். அவரது தலைமுடி சடாமுடியாகி விட்டது. அப்பொழுது அருகில் இருந்த சிறிய கொடிகள் அந்த சடாமுடியை, சிறிய மலை என எண்ணி, அதன் மீது படரத் தொடங்குகின்றனவாம்...

ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டுமா திருமலையில் பக்தி செலுத்துகின்றார்கள். இந்த மலையில் விலங்குகளிடம் கூட அந்த பக்தி உள்ளதாம்! எப்படி? இதோ! திருமழிசை ஆழ்வார் (பாடல்:2427)

**"வைப்பன் மணி விளக்கா மா மதியை மாலுக்கென்று**
**எப்பொழுதும் கை நீட்டும் யானையை"**

"யானை என்ன செய்கிறதாம்? வேங்கடவனுக்கு விளக்கு ஏற்றி வைத்து வணங்க விரும்பியது யானை ஒன்று. விளக்கைத் தேடியது. அப்பொழுது சந்திரனை விளக்கெனப் பிடிக்கத்தாவுகிறதாம்?



## அயன மண்டபம்

**திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் ஸ்வாமிக்கு நவீனமயமாக்கப்பட்ட கண்ணாடி அறையான அயன மண்டபம் அண்மையில் அமைத்துள்ளனர். இந்த மண்டபத்தில் வண்ண வண்ண மலர்களுடன் ஆபரணங்களுடன் ஸ்ரீதேவி பூதேவியருடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி, புண்டரிகவல்லி தாயார் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும்.**







பேயாழ்வார் தமது 2351 – வது பாடலில். இன்னொரு காட்சியைக் காட்டுகின்றார். வேங்கடத்தில் உள்ள யானை ஒன்று மத நீராலேயே தனது வாயை கழுவிக் கொண்டு, அதனாலேயே தனது கால்களையும் கழுவிக் கொள்கின்றது.

இவ்வாறு தன் உடலை சுத்தம் செய்து கொண்டு பூஜைக்கு தயாராகின்றது. பின், துதிக்கையால் தேன் வழிகின்ற மலர்களை எடுத்து, வேங்கடவனது பாதங்களில் இடுகின்றதாம். பூதத்தாழ்வார் விடுவாரா என்ன? யானைகள் மட்டுமா வேங்கடவனை வணங்கும்? குரங்குகளும் சளைத்ததா என்ன?

குரங்குகள் காலையில் எழுந்ததும் மலர்களால் வேங்கடவனை துதிக்கின்றனவாம்

*"போது அறிந்து வானரங்கள் பூஞ்சுனை புக்கு*
*ஆங்கலர்ந்த போது அரிந்து கொண்டு ஏத்தும்.."*

(பாடல்: 2253) – என்பதே அந்தப் பாடல். இவ்வாறு திருவேங்கடவனை வணங்க நம்மைத் தூண்டுகின்றார்கள் ஆழ்வார்கள்.

"இனிய துழாய் மாலை அணிந்தவனைப் பிரியாமல் இருக்க விரும்புபவர்களின் வினைகளை வேங்கடவன் தீர்த்து வைப்பான்" – என்கின்றார் பொய்கை ஆழ்வார் (பாடல்: 2107)

இவ்வளவு சிறப்புப் பெற்ற வேங்கட மலையையும், வேங்கடவனையும் தரிசிக்க உள்ளத்தில் ஆசை எழுவது இயற்கையே. அது தான் திருமலையின் தனித் தன்மையாகும்.

*"வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும்*
*மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும் -*
*வேங்கடமே*
*தானவரை வீழத்தன் ஆழிப்படை தொட்டு*
*வானவரைக் காப்பான் மலை".*

– (பாடல்: 2429)

என திருமழிசை ஆழ்வார் போற்றும் திருமலைக்குச் சென்று உய்வோம்.





## "வார சேவைகள்"

**"நித்ய கல்யாணம் பச்சை தோரணம்" என்ற வரிகளுக்கு ஏற்றபடி திருவேங்கடமுடையானுக்கு தினமும் பல்வேறு சேவைகள் நடைபெறுகின்றது. வாரந்தோறும் நடைபெறும் சேவைகளை "வார சேவைகள்" என்பர். திங்கட்கிழமை விசேஷ பூஜை, செவ்வாய்க் கிழமை அஷ்டதள பாதபத்மாராதனம், புதன் கிழமை சஹஸ்ர கலசாபிஷேகம், வியாழக்கிழமை திருப்பாவாடை சேவை மற்றும் பூலங்கி சேவை, வெள்ளிக்கிழமை அபிஷேகம் புனுகு, கஸ்தூரி, ஜவ்வாது முதலான சுகந்த பரிமளத்துடன் ஆகாச கங்கை தீர்த்தத்தால் சுமார் ஒரு மணிக்காலம் அபிஷேகம் நடைபெறும். அதன் பின்னர் மஞ்சளினால் ஸ்வாமி திருமார்பில் உறைந்துள்ள மஹாலக்ஷ்மிக்கும் கூட இந்த அபிஷேகம் நடைபெறும்.**











# கலியுக வரதன் வேங்கடேசன்

– திருமதி கீதா சுதர்சனம், புது தில்லி.

நாம் வாழும் இந்தக் கலியுகத்தில் நம் பாரத தேசத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இருந்து பிரத்யட்சமாக எல்லா பக்தர்களையும் காக்கும் தெய்வம் கலியுக வரதன் ஸ்ரீவேங்கடேசன், ஏழுமலையான், திருவேங்கடவன், சேஷாத்ரி, கருடாத்திரி, வேங்கடாத்ரி, நாராயணாத்ரி, விருஷபாத்ரி என்று பல திருநாமங்களால் அழைக்கப்படுகிறான். பிரம்மா, சிவன், இந்திரன் மூவரும் பயபக்தியுடன் எம்பெருமான் ஸ்ரீய: பதியின் திருவடி சேர தலைக்கு மேல் தூக்கிய கைகளுடன் காத்துக் கொண்டு இருக்க, சூரியன், சந்திரன் போன்ற நவக்கிரகங்கள் அவன் திருவடித் தாமரைகளில் தொண்டு செய்யக் காத்திருக்கின்றனர்.

மேல் நோக்கிய இரண்டுகைகள் தேவர்களின் பகைவரை அழிக்கும் சங்கு சக்கரங்களைத் தரிக்கின்றன. கீழுள்ள வலது கை தன் திருவடிகளை சேவிக்கத் தக்கனவாக குறிக்கின்றது. துடையைத் தொட்ட இடதுகை பக்தர்களுக்குப் பிறவிக்கடல் துடையளவேயென்று அறிவிக்கின்றது. திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்கிற மச்சமும், ஸ்ரீதேவியும் எம்பெருமான் அழகை மிகைப்படுத்துகின்றார்கள்.

தவள ஒண் சங்கு சக்கரம், தாமரைத் தடம் கண், செங்கனி வாய், துழாய்முடிமாலை, கார் அன்னமேனி அர்ச்சா அவதாரத் திருமேனியைக் கண்டால் எல்லையில்லாத இன்பங்கள் உண்டாகும். தேன், அமுதம், பால், பழம், கரும்பு போல் சுவை தரும் காட்சி அளிப்பவன். தேன் துளிர்க்கும் திருத்துழாய் சூடிய திருமுடி. திருவேங்கடமுடையானைக் கண்டு வணங்கி அவனுக்கே அடிமைப்படுவோம். சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தை, தாய் என்று அடைவோம்.

இராவணன் சீதாப்பிராட்டியைக் கடத்திச் சென்றான். அந்த ஆபத்தான சூழ்நிலையிலும், ஸ்ரீராமனைப் பிரிந்திருந்த சமயத்திலும், சீதாப்பிராட்டி இராவணனைத் திருத்த முயல்கிறாள். ஸ்ரீராமனுடன் நட்பு செய்து ஸ்ரீராமனைச் சரணடைந்து





## திருமலையில் திருவேங்கடவனுக்கு பிரசாதங்கள்

**ஆனந்த நிலையன், அலங்காரப்பிரியன்! அதை விட சிறந்த ஆகாரப் பிரியனும் ஆவார். எத்தனையோ வகை பலகாரங்களான லட்டு, வடை, தோசை, அப்பம், க்ஷீரான்னம், பாயசம், கதம்ப சாதம், மிளஹோரை, பொங்கல், கேசரி போன்ற பிரசாதங்களை ஸ்வாமிக்கு நாள்தோறும் நிவேதனம் செய்வர். ஸ்வாமி நாள்தோறும் மண்வட்டிலிலேயே (உடைந்த மண்பானை) உண்பார். ஒருமுறை உணவு உண்டபின் அந்த வட்டிலை எறிந்து விடுவர். மறுபடியும் உணவு உண்ண புதிய வட்டிலையே உபயோகிப்பர். பாதியாக உடைந்த மண்பானை. இதனை ஓடு என்பர் (திருஓடு). எதனை உட்கொண்டாலும் அதனை பக்தர்களுக்கே வழங்குகிறார். அந்தப் பிரசாதத்தை பக்தர்கள் உட்கொண்டு தம் கோரிக்கைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். முழுமையான ஆரோக்கியத்தை அடைகின்றனர்.**

பிழைத்துப் போ'' என்று நல்லுரை கூறுகிறாள். நம்மாழ்வாரும் அதையே தான் செய்கிறார். வழி தவறி செய்வதறியாமல் தவிக்கும் நமக்கு ஸ்ரீய: பதியின் கல்யாண குணங்களை எடுத்துக் காட்டி, சம்சாரம் என்ற கடலில் மூழ்கித் தவிக்கும் நம்மை கரையேற்ற முயல்கிறார்.

எம்பெருமான் உயர்ந்தவன், மேன்மையானவன் என்று பாடின நம்மாழ்வார், பகவான் சர்வ சுலபன், எளிமையானவன், இனிமையானவன் என்பதையும், அவனை அடைவது எளிது என்பதையும் உணர்த்துகிறார். பரம் வியூகம் என்று சொல்லும் போது எம்பெருமான் ஸ்ரீவைகுந்தத்திலும், திருப்பாற்கடலிலும் வீற்றிருப்பதால் அவனை அணுக முடியுமோ என்ற பயம், ஐயம் நமக்குத் தோன்றுவது இயல்பு. இந்த பயத்தை நம்மிடமிருந்து போக்குகின்றார் நம்மாழ்வார். விபவத்தில் அவன் அர்ச்சா அவதார மூர்த்தியாய் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறான். நமக்கென்றே இந்த அர்ச்சா அவதாரம்.

பரத்வத்தின் சர்வ மேன்மையோடு எம்பெருமானின் எளிமையான, அணுகத் தகுந்த, இனிமையான அர்ச்சா அவதாரத்தை நாம் அனுபவிக்க வேண்டும். அர்ச்சையில் எல்லா ஆலயங்களிலும் எம்பெருமான் வாசம் செய்கிறான். நம்மால், நம் இஷ்டப்படி திரு ஆராதனம் செய்ய இணைகிறான். நாம் நினைக்கும் போது அவனுக்குத் திருமஞ்சனம் நிவேதனம். நமக்குப் பிடித்த நம்மால் முடிந்த பொருட்களை அவன் முன் படைக்கிறோம். அதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறான். இதற்கெல்லாம் அர்ச்சாவதாரத்தில் நம்மோடு ஒத்துழைப்பதால் அவன் சௌலப்யம், எளிமை நமக்கு விளங்குகிறது. இது மாத்திரமா ? ஒரு தடவை ஒரே ஒரு தடவை அவனிடம் சரணடைந்தால் போதும் பிறவி நீங்கும் வைகுந்தப் பிராப்தி கிடைத்து விடும்.

*''போகின்ற காலங்கள் போய காலங்கள்*
*போகு காலங்கள் தாய் தந்தை உயிர்*
*ஆகின்றாய்! உன்னை நான் அடைந்தேன்*
*விடுவேனோ?*
*பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும் நாதனே!*
*பரமா! தண் வேங்கடம்*
*மேகின்றாய்! தண் துழாய் விரை நாறு*
*கண்ணியனே!''*

எத்தனைப் பெரியவன் அவன். ஆனாலும் எத்தனை எளியவனாய் நமக்குக் கிடைக்கிறான். இந்த அர்ச்சா அவதாரத்தில் பிரம்மா, சிவன், இந்திரன், மூவருக்கும் சரீரீ. ஆனால் அம்மூவர்க்கும் மேம்பட்ட, மூவரிலும் வேறான, மூவரைக் காட்டிலும் முதலானவன். அவர்களைப் பிறப்பித்து, அவர்களுக்கு அந்தர்யாமியாய் இருக்கின்றான். அவர்களுடைய சாபம் தீர்த்து அவர்களுக்கும் நற்கதி தருகிறான். இந்த மூவருடன் தேவர்கள் ஓடிப் போய் எம்பெருமானைப் பாடி புகழ்ந்து அவனிடம் சரண் புகுகின்றார்கள். இவ்வளவு உயர்ந்த பரமன், மா மாயன் அர்ச்சையில் நின்று காட்சி அளிக்கிறான். இந்த அர்ச்சா அவதாரத்தை சேவித்தால் நம்

பாபங்கள் அகன்று விடும். பறந்தோடி விடும். அதனால் தான் அவனுக்கு பாப நாசன் என்கிற திருநாமம்.

எக்காலத்திற்கும் இனிய அமுதமான பகவான் நம் ஆத்மாவில் கலந்து ஒன்றாகி விடும் அளவிற்கு, அவன் ஒளிக்கதிர் வடிவை அர்ச்சையில் கண்டு களிக்கலாம். நீல மணி நிறக் கண்ணன். தேவர்களுக்கும் அமரர்களுக்கும் – ஏன் – நம் எல்லோருக் கும் கரும்பையும் பழுத்த பழங்களைப் போன்று இனிமையானவன். அவனை இந்த இனிய அர்ச்சா அவதாரத்தில் கண்டு வணங்கினால் துன்பங்கள் சிறிதும் இல் லாமல் அகலும் என்கிறார் நம்மாழ்வார்.

*“எழுமைக்கும் எனது ஆவிக்கு இன்*
*அமுதத்தினை எனது ஆர் உயிர்*
*கெழுமிய கதிர்ச் சோதியை மணி*
*வண்ணனைக் குடக் கூத்தனை*
*விழுமிய அமரர் முனிவர்*
*விழுங்கும் கன்னற் கனியினை*
*தொழுமின் தூய மனத்தர் ஆய்*
*இறையும் நில்லா துயரங்களே”*

கண்ணால் காண அரியவன் என்று நினைத்து சும்மா இருக்க முடியுமா? முடிவதில்லை. அவனைப் பார்க்க வேண்டும் என்று நெஞ்சு கெஞ்சுகிறது, துடிக்கின்றது. எம்பெருமான் வானவன், சர்வேஸ்வரன் என்ற போதிலும் பூமியில் உள்ள நம்மைப் போன்றவர்க்கெல்லாம் அருள் செய்ய உகந்தருளி அர்ச்சை அவதாரத்தில் இருந்து நம்மைக் காக்கிறான்.

ஒவ்வொரு திவ்யச் க்ஷேத்திரத்திலும் ஒவ்வொரு திரு நாமம். நாமங்கள் ஆயிரம் உடைய நம்பெருமான் என்று புகழ்ந்து பாடப்பட்டவன். அவனுடைய திருவடித் தாமரைகளை விட்டு

## ஹாதிராம்ஜி பாவாஜி



திருமலை சுமார் தொன்னூறு வருட காலம் அதாவது 1843ஆம் வருடம் முதல் 1933 வரை மஹந்துக்கள் எனும் பாவாஜிகள் (பைராகிகள்) பொறுப்பில் இருந்து வந்திருக் கிறது. திருவேங்கடநாதனின் பிரியத்துக்குப் பாத்திரமான பக்தர் ஹாதிராம் பாவாஜி பற்றியது. இவர் தான் முதல் மஹந்து. இவர் ஸ்தாபித்த மஹந்து மடம் தற்போதும் திருமலையிலும், கீழ் திருப்பதியிலும் உள்ளது. திருமலை திருக்கோயிலின் பிரதான வாயிலுக்கு, தெற்குப்புறமாக உள்ள அந்த மடத்தின் மேல் இந்த பக்தரான ஹாதிராம்ஜி பாவாஜியும், நமது திருவேங்கடமுடையானும் எதிர் எதிரே அமர்ந்து பகடை (அதாவது தாயம்) விளையாடிக் கொண்டிருக்கும் சித்திரம் அனைவரின் கண்களையும் ஆச்ச ரியப்பட வைக்கும். மகாராஜா, பாவாஜியை சிறையில் அடைத்து விட்டு, அவர் முன்பாக மாபெரும் கரும்பு கட்டுகளை வைத்து விட்டு, விடிவதற்குள் முழுவதையும் தின்று தீர்க்க வேண்டும். நீ சொல்லும் பெருமாள் வந்து உனக்கு உதவுகிறாரா பார்க்கலாம் என்று கட்டளையிட, பாவாஜி செய்வதறியாமல் திகைத்தார். “எம்பெருமானே இந்த சோதனை எனக்குத் தேவைதானா? நான் உன்னைத் தரிசித்து கொண்டேயிருக்க வேண்டும் என்று ஆசைப் பட்டேனே தவிர வேறு என்ன பாவம் செய்தேன்” என்று கண்ணீருடன் பகவான் நாமத்தை ஜபித்தார். அப்போது ஒரு பெரிய யானை பிளிறலுடன் கரும்பு கட்டுகளை உண்பதை கண்டு, அந்த யானை சாக்ஷாத் எம்பெருமானே என்பதை உணர்ந்த பாவாஜி இருகரம் கூப்பி சேவிக்க, அது தனது தும்பிக்கையால் அவரது தலைமீது ஆசிர்வதித்து விட்டு மறைந்து போனது. விஷயமறிந்து வந்த கிருஷ்ண தேவராயர் பாவாஜியிடம் மன்னிப்பு வேண்டியதோடு, அன்று முதல் அவரை ஹாதிராம்ஜி என்றே அனைவரும் அழைக்கத் தொடங்கினார்களாம்.



விலகாமல் இருக்க வேண்டும். அதற்கும் அவன் அருள் வேண்டும்.

“குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர் திருவேங்கடமா மலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே”

சர்வ பாபங்களையும் தரிசனத்தாலேயே போக்கும் என்பதால் வேங்கடாசலம் என்ற திருநாமம். “வேம்” என்றால் பாபங்கள். “கட” என்றால் எரிப்பது. நமக்குப் பிறப்பிலிருந்தே ஏற்பட்டுள்ள, முன்பிறவியிலிருந்து நம்மைத் தொடர்ந்து வருகிற, இனிமேல் வரக் கூடிய பாபங்கள் வெந்து போகும். முற்றிலும் அழிந்து விடும். வேங்கடத்தில் உறையும் ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு “நம:” என்று சொன்னால் போதும். “வேங்கடேசாய நம:” என்றால் போதும். விரோதங்கள் விரோதிகள் அழிந்து விடுகிறார்கள்.

“வேங்கடங்கள் மெய்ம்மேல் வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்கடத்து றைவார்க்கு நம வென்ன
ஆம் கடமை அது சுமகட்ந்தார்கே”

திருவேங்கடத்தானுக்கு நம: என்று சொல்ல வேண்டியது தான் நம் கடமை. இதைச் செய்து விட்டால் பகவத் கைங்கர்யம் கிடைக்காமல் தடுக்கும் தடைகள் அனைத்தும், பாபங்களும் தீயினில் விழுந்து வெந்து, சாம்பலாகி அழிந்து விடும். அதற்குப் பிறகு எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்யும் பாக்கியம் கிடைத்து விடும்.

ஆகவே எம்பெருமானின் திருவடிகளை நன்றாகப் பிடித்துக் கொண்டால் போதும். நீ விடிலும் நான் விடேன் என்பது போல் திண்ணமாய், முழு நம்பிக்கையுடன் அவனிடம் சரணாகதி அடைந்து விட்டால் போதும், நம்மில் உடனே கலந்து நம்மைக் கடாக்ஷிப்பான்.

அவன் கல்யாண குணக்கடல் ஆழங்காண முடியாதது. அகன்றது. அதில் மூழ்கி மூழ்கி அனுபவிக்க ஆரம்பித்துவிட்டோமேயானால் நாம் அடையும் ஆனந்தத்திற்கு அளவு ஏது? தாயும் தகப்பனும் செய்யும் நன்மைகளை, நிகழ்காலம், கடந்த காலம், வருங்காலம் ஆகிய முக்காலங்களிலும் நமக்கு அருள்பவன் ஸ்ரீவேங்கடேசன். அவனை அடைந்த பிறகு நமக்கு வேறு என்ன கதி.

கணப்பொழுது கூடப் பிரியாது கூடி இருக்கும் திருமகள் வாழும் மார்புடையவனே! ஒப்பில்லாத புகழ் உடையவனே! மூவுலகங்களையும் படைத்து, காத்து, உடைமையாகக் கொண்டவனே! என்னை ஆள்பவனே! நிகரில்லாத நித்திய சூரிகளும் முனிவர் கூட்டங்களும் உகந்து துதிக்கும் பெருமை உடைய திருவேங்கடத்தானே! உன்னையன்றி வேறு கதி இல்லை எனக்கு. அடியேன் உனக்கே ஆட்பட்டேன். உன் திருவடிகளில் சரண் அடைகின்றேன் என்று கூறி திருமலையில் வாழும் கலியுக வரதன் திருமாலிடம், திருவேங்கடமுடையானிடம், ஸ்ரீமந் நாராயணனிடம், மஹா விஷ்ணுவிடம், ஸ்ரீபரவாசு தேவனிடம் சரணடைவோம்.



## திருமலையில் பிளாஸ்டிக் தடை



கலியுக வைகுண்டமாகத் திகழும் புண்ணியத் திருத்தலம் திருமலையாகும். இத்திருமலையில் பல்லுயிர்களும் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. இப்புண்ணிய திருத்தலத்தின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி கொள்ளல் வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.

# கருட வாகனம்

சித்திரக் கதை

கதை மூலம் : ஸ்ரீநிவாச தீக்ஷிதலு

சித்திரம் : தும்பலி சிவாஜி




கருடன் அமிர்தத்தை கொண்டு வந்து கத்ருவிடம் அளித்தான். கத்ரு...
உங்களுக்கு என்னிடமிருந்து விடுதலை கிடைத்தது.
நன்றி
அப்பொழுது இந்திரன் வேகமாக வந்து கத்ருவிடமிருந்து அமிர்த கலசத்தை தூக்கிக் கொண்டு சென்றான். ஏமாற்றத்துடன் கத்ரு...
ஐயோ! என் அமிர்தம். என் அமிர்தம்...
அப்பொழுது ஸ்ரீவிஷ்ணு கருடனின் முன் காட்சியளித்தார்.
கருடா! உன் அமிர்த பக்தியை மெச்சினேன். ஏதாவது வரத்தைக் கேள்!
ஸ்வாமி! நாகர்கள் எனக்கு உணவாகும்படி அருள் புரியுங்கள்!
குழந்தாய்! மற்றொரு வரத்தையும் கேள்!
பரமாத்மா! தங்கள் வாகனமாக இருப்பதற்கான வரத்தை அளியுங்கள்.
ததஸ்து வைனதேயா!
தன்யனானேன் ஸ்வாமி!
அன்று முதல் கருடன் வாகன வடிவில் ஸ்ரீவிஷ்ணுவை வணங்கிக் கொண்டிருக்கிறான்.
அடுத்த இதழில் மற்றொரு கதையை படித்து மகிழ்வோம்.
முற்றும்.

## பல்சுவைப் பகுதி

1. திருவேங்கடமுடையான் அவதரித்த நட்சத்திரம் என்ன?
   அ) ரோகினி ஆ) திருவோணம் இ) அவிட்டம்
2. திருவேங்கடவனை தன் கீர்த்தனைகளால் அர்ச்சித்த தெலுங்கு கவி?
   அ) நன்னய்யா ஆ) திக்கன்னா இ) அன்னமய்யா
3. திருமலையில் பிரம்மோத்ஸவம் நடைபெறும் மாதம் எது?
   அ) புரட்டாசி ஆ) ஐப்பசி இ) ஆவணி
4. திருமலையை பாடிய ஆழ்வார்கள் எத்தனை பேர்?
   அ) 10 ஆ) 11 இ) 12
5. திருமலைப்படியை முழங்காலால் ஏறியவர் யார்?
   அ) திருமலைநம்பி ஆ) இராமாநுஜர் இ) மாமுனிகள்

**விடைகள்**
1) ஆ, 2) இ, 3) அ, 4) அ, 5) ஆ

### பொருத்துக...

1. தயாசதகம் - அ. ஏழு மலை
2. அதிகாலை - ஆ. திருமலை
3. ஸப்தகிரி - இ. திருவோணம்
4. சிலாதோரணம் - ஈ. தேசிகர்
5. சக்ர ஸ்நானம் - உ. சுப்ரபாதம்

1.ஈ, 2.உ, 3.அ, 4.ஆ, 5.இ.



### தெரிந்து கொள்ளலாமே...

"இடம் வலம் ஏழ் பூண்ட இரவித்தேர் ஓட்டி
வடமுக வேங்கடத்து மன்னும் குடம் நயந்த
கூத்தனாய் நின்றான் குரைகழலே கூறுவதே
நாத்தன்னால் உள்ள நலம்" - பேயாழ்வார்

திருவேங்கடமுடையானின் திருவடிகளை துதிப்பதே நாவினால் நாம் அடையக்கூடிய பயனாகும். எனவே எந்நேரமும் அவனின் திருவடிகளை துதித்துக் கொண்டே இருப்போம்.

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

அப்பன் எல்லையே திருவேங்கடத்து இல்லை திருவருட்கு.

திருவேங்கடத்து அப்பன் திருவருட்கு எல்லையே இல்லை.

### சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### விடுகதை பகுதி...

1. பச்சை மரத்தில் மஞ்சள் குருவி...
2. அடி மலர்ந்து நுனி மலராத பூ...
3. எங்கு சென்றாலும் தொடர்ந்து வருவான்...

1.எலுமிச்சை, 2. வாழைப்பூ, 3. நிழல்



Printed by Sri P. Ramaraju, M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Published at Tirupati – 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
2021 அக்டோபர் 07 முதல் 15 வரை



**14-10-2021**
வியாழக்கிழமை
பகல்: திருத்தேர்



**14-10-2021**
வியாழக்கிழமை
இரவு: குதிரை வாகனம்


SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 20-09-2021
15-10-2021
வெள்ளிக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்